தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-[illegible].

மலர் 2 | சென்னை 24—1—56 செவ்வாய்க்கிழமை | இதழ் 32

முத்துப் பல் காட்டி முறுவலிக்கும் தேன் கதலி!

ஜானகி, அயோத்திராமனின் அன்பு மனைவி; கம்பநாடனின் கற்புத் தெய்வம்; இராமகாதையின் ஜீவ நாடி. மாதவி சிலப்பதிகாரத்திற்கு எவ்வளவு முக்கியமானவளோ, அவ்வளவு முக்கியமானவள் இராமாயணத்திற்கு ஜானகி. முதலிலே சீராக வாழ்ந்து, இடையிலே சீரழிந்து, கடையிலே கற்பிழந்தவளெனக் கணவனாலே குற்றஞ் சாட்டப்பட்டுக் கானகத்திற்கு ஓட்டப்பட்டவள். அடுக்கடுக்காக அல்லல் பலவற்றை அனுபவித்த சீதை உண்மையிலே பரிதாபத்திற்குரியவள்தான்.

கம்பனின் பாராட்டுதலைப் பெற்று காந்தியாரின் கருத்தைக் கவர்ந்த சீதை, இராமகாதையிலே சித்தரிக்கப்படுகின்ற முறையை ஆழ்ந்து நோக்கினால் அவளது கற்புநிலையிலே நாம் ஐயம்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இராவணனால் மட்டுமல்லாமல் விராதன், காகாசுரன் எனப்படும் ஜயந்திரன் போன்ற பலராலும் விரும்பப்பட்டவளாகவும் காணப்படுகிறாள். மேலும் காவியத் தலைவியாக இருப்பதற்கு யோக்கியதையற்ற முறையிலே ஆழ்ந்த அறிவற்றவளாகவும், உறுதியான உள்ள மற்றவளாகவும் தோற்றமளிக்கிறாள்.

இவைகளுக்குரிய சான்றுகள் வால்மீகி இராமாயணம், சத கோடி இராமாயணம், அத்புத இராமாயணம், யோகாவஸிட்ட இராமாயணம், ஆனந்த இராமாயணம் போன்ற பல இராமாயணங்களில் காணப்படுகின்றன.

நிலத்திலே இருந்து தோன்றிய சீதையின் பிறப்பைப் பற்றி அற்புத இராமாயணத்திலே எட்டாவது சருக்கத்திலே ஒரு வியத்தகுகதை காணப்படுகிறது. அதன்படி சீதை, போன ஜன்மத்தில் மண்டோதரியின் மகளாகக் காணப்படுகிறாள். வேதவதி என்ற தேவகன்னியை இராவணன் போன ஜன்மத்தில் கற்பழித்ததால் அவள் இறந்துவிடவே, இப்பிறவியில், அவளிட்ட சபதப்படி சீதையாகப் பிறந்து இராவணனின் முடிவுக்கு ஏதுவாக இருந்தாள் என்று வேறொரு இராமாயணம் கூறுகிறது. சுருக்கமாகக் கூறினால், சீதையொரு அநாமதேயமாகக் காட்சியளிக்கிறாள். தாய் தந்தையில்லாக் காரணத்தாலோ என்னவோ இந்தத் தாழ்வெல்லாம் இவளுக்கு உண்டானது போலும்! கைகேயியின் கட்டளைப்படி இராமன் தன் தாரத்தோடும், தம்பியோடும் கானகம் ஏகுகிறான். தென்னாடு வந்து தண்டகாருண்யக் காட்டிலே நுழைந்து வந்துகொண்டிருந்தபோது அவர்கள் முன் விராதன் என்ற ★ அரக்கன் தோன்றி அவர்களை நோக்கி "நில்லுங்கள், மேலே போகவேண்டாம். இத்தகைய அழகு மிக்க ரூபவதி காஷாய ஆடைதரித்திருக்கிற உங்கள் போன்றவர்களிடம் இருக்கக்கூடாதவள்; இவள் எம் போன்றவர்க்கே உரியவளாவாள்" என்று கூறி சீதையை எடுத்துத் தன் இடுப்பின்மீதுவைத்துக்கொண்டான். இதைக் கண்ட இராமன் இதயம் நொந்தவனாய் தன் தம்பியை நோக்கி, "தம்பி, என் மனைவிக்கு நேர்ந்திருக்கின்ற கதியைப் பார்த்தனையா? இதைக் கண்ட பின்னும் வாளா இருக்கின்றனையே" என்று புலம்பவே, அவன் பிரமமந்திரத்தைச் சொல்லி அம்பை எய்து விராதனை வீழ்த்தி சீதையை மீட்டு மேலே சென்றனர். உண்மையிலே இச்செயல் இராமன் மனதிலே ஓர் குழப்பத்தை யுண்டு பண்ணியிருக்கவேண்டும்; இல்லையேல் தம்பியிடம் இதுபற்றி ஏன் அலறித் துடித்துப் பேசியிருக்க வேண்டும்?

அசோக வனத்திலே சீதையைக் கண்டு அனுமன் அவளுடன் பேசி சூளாமணியைப் பெற்றதாக வால்மீகி இராமாயணத்திலே சுந்தர காண்டத்திலே ஒரு பகுதி வருகிறது. தன்னுடை கடந்த கால நிகழ்ச்சிகளுள் ஒன்றாக சீதை, அனுமனிடம் ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறாள். "சித்ரகூட மலைச்சாரலில் நாங்கள் மிகுதியாக விளையாடிய காரணத்தால் களைப்புற்ற என் கணவர் என் மடிமீது தலைவைத்துப்படுத்தவராய் உறங்கிவிட்டார். இதுவே தக்க சமயமென்று கருதிய ஒரு காகம் என் கொங்கை, மர்மஸ்தானம் ஆகிய இவ்வுறுப்புகள்மேல் விருப்பம் கொண்டு இவைகளைக் கொத்தியது. நான் துரத்தியும் பயமில்லாமல் மீண்டும் என்னிடமே வந்து இவ்வுறுப்புக்களை அடிக்கடி கொத்தியது. எனவே, குருதி வடியத் தொடங்கியது. என் கணவரும் எழுந்துகொண்டார். காகத்தை உற்றுநோக்கிய அவர் இந்திரன் மகனாகிய ஜயந்திரனே இக்காகம் எனக் கண்டு அங்கு கிடந்த ஒரு புல்லைக் கிள்ளி அம்பாக அதன் மேல் செலுத்தவே, எங்கும் அபயம் கிடைக்காமல் இறுதியில் இராமனையே அடைந்து உய்ந்து சென்றது" என்றாள்.

கடந்த கால நிகழ்ச்சிகள் எத்தனையோ இருக்க, இந்த மிக உன்னதமான நிகழ்ச்சிதான் சீதையின் சிந்தையிலே இடம்பெற்றிருந்தது போலும்! பெண்மை, நாணம், மானமுடைய எந்தப் பெண்ணும் வெளியிடக் கூடாத, வெளியிட முடியாத இந்த வெட்கங்கெட்ட செய்தியை மாற்றானாகிய அனுமன் முன் கூசாது கூற சீதையின் உள்ளம் எவ்வாறுதான் இடந்தந்ததோ அறியோம்! கற்பிலும், மானத்திலும் உறுதியான நம்பிக்கையுடைய எந்தப் பெண்ணும் இதுபோல் தீண்டத் தகாத தன் உறுப்புகள் மாற்றானால் வேண்டுமென்றே தீண்டப்படுமானால் அவள் உயிர் வாழ்வதென்பது இயலாத காரியம். ஆனால் சீதை இதற்கு விதிவிலக்காகவும் இருக்கலாம். இராமாவதார மகிமையைக் கூறி உலக மக்களுக்கு நீதியைப் புகட்டும் உன்னத காவியத்தில் இடம் பெற்றுள்ள உயரிய செய்தியிது.

இச்செய்தியை அனுமன் சீதையிடமிருந்து கேட்டதனாலோ என்னமோ அவன் சீதையை நோக்கி "நீ என் தோள்மீது அமர்ந்து கொள்வாயாக; நான் உன்னை இலங்கையினின்றும் வெளியெடுத்துச் சென்று காப்பாற்றுகிறேன்" என்றான். மாற்றான் மனைவியிடம் இவ்வாறாகவா பேசுவது என்று வெகுண்ட சீதை இதற்கு மறுத்து விடுகிறாள். மேலும் சீதையைப் பல திசைகளிலும் தேடிக் காணமுடியாதபோது, "இராவணன் சீதையை எடுத்து வந்தபோது தன் மார்போடு அவளை இறுக அணைத்தலால் அவள் எலும்பொடியப்பட்டவளாய் ஒருவேளை கடலிலே வீழ்ந்து இறந்திருப்பாளோ! அல்லது சீதை காமபரவசத்தால் இராவணனிடம் சரியெனச் சேர்ந்திருப்பாளா?" என்று அனுமன் தனக்குள் எண்ணுகிறான். (வால்மீகி இராமாயணம். சுந்தரகாண்டம். அனுமன் காட்சிப் படலம்) இராமனுக்கு ஊழியனான அனுமனே இராமன் மனைவியாம் சீதையின் கற்பைப் பற்றி, ஒழுக்கத்தைப் பற்றி இவ்வாறு ஐயுறுவானாகில் பிறர் கூற வேண்டுவது யாதுளது?

ஈரோட்டான்

இக்கட்டுரையாளர் ஒரு தமிழ் விரிவுரையாளர். சிறந்த புலமை உடையவர், சிறையிருந்த ஜானகியின்தன்மையை-வால்மீகி வர்ணித்துள்ள விதத்தை இங்கே படம்பிடித்துக் காட்டுகிறார். "இராவணனை மட்டும் குற்றவாளி என்று கோண்டு, அவனை இராமன் கோன்றது தவறு" என்ற சீதையின் வாதத்தை விளக்குகிறார், இக் கட்டுரையின் மூலம்.

சீதையின் விருப்பமில்லாமல் இராவணன் அவளை வலியத் தூக்கிச் சென்றான் என்பார்கள். இதையொட்டி இராமாயணத்திலே வரக்கூடியகருத்துக்களைக்கூர்ந்து நோக்கின் இக்கருத்து தவறுடைத்தாகக் காணப்படும். "விருப்பமில்லாத எந்தப் பெண்ணையாவது தொட்டு வற்புறுத்தினால்உன் தலை வெடித்துவிடும்" என்று சிவனார் விட்ட சாபமொன்று இராவணன்பால் உளது. சீதை விரும்பாமல் இராவணன் வலிய முறையில் அவளைத் தூக்கிச் சென்றிருப்பானேயாயின் அவன் தலையானது சிவனார் சாபப்படி வெடித்திருக்கவேண்டும். அவன் தலை அவ்வாறு வெடிக்காத காரணத்தால் இராவணன் சீதையைவலியத்தூக்கிச்சென்றான் என்ற கூற்று ஏற்புடைத் தாகாது. இதற்குச் தொடர்பான இன்னும் சில கருத்துக்களை நோக்கினால் சீதையே இராவணனை விரும்பிச் சென்றிருப்பாளோ என்று நாம் எண்ண வேண்டியுள்ளது. இராவணனோ ஒப்புயர்வற்ற அறிஞன்; கற்றோர் பாராட்டும்படியான கலைஞன். தன்னிகரற்ற வீரன்; மேலும் அழகிகளும இராவணன் அழகைக் கண்டு விரும்பி அவர்களே அவனை நாடி வந்துள்ளனர் என்று வால்மீகியார் தன் காவியத்தில் கூறுகிறார். இராவணனுடைய பேரழகைக் கண்டு இராமனே போர்க்களத்தில் வியந்து நின்றான்; வீடணன் இராமனுக்கு இராவணனைக் காட்டுகிறான். இலங்கை வேந்தனைக் கண்ட இராகவன் "விபீஷணா, என்ன காந்தி! அரக்கர் தலைவனான இராவணன் மகா புகழுடையவன்போலத் தெரிகிறது. நடுப்பகற் சூரியனைப் பார்ப்பது எப்படி அசாத்தியமோ, அப்படி இவனைப் பார்க்கக் கண் கூசுகிறதே! இவன் தேகம் தேஜஸால் சூழப்பட்டிருப்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. தேவர்களுக்குக்கூட இப்படிப்பட்ட காந்தி கிடையாதே! இவன் மட்டும் என் மனைவியைக் கவர்ந்து செல்லாமல் இருந்திருப்பின் இவனை நான் எவ்வாறு புகழ்வேன் தெரியுமா?" என்று அவன் அழகை வியந்து கூறினான். (வால்மீகி இராமாயணம் யுத்தகாண்டம். சருக்கம் 58)

ஆடவர்க்கு ஆடவரே விரும்பும் அழகையுடைய இராவணனை, சீதை கண்டபோது எவ்வாறு தன் உள்ளத்தைப் பறிகொடுக்காமல்இருந்திருக்கமுடியும்? இதுஉண்மையிலேயே சிந்திக்க வேண்டிய விஷயந்தான். மேலும் சீதையின் உள்ளம் இராவணனை அடியோடு வெறுத்தொதுக்கி விட்டதாகவும் தெரியவில்லை. அனுமன் இலங்கைப் போரை முடித்த பின்னர் சீதையை நோக்கி "சீதையே, நீ சுகமாய் அயோத்திக்குத் திரும்பலாம். நீ பட்ட துன்பமெல்லாம் இத்தோடு அழிந்தது. இராவணன் செய்யத் தகாத குற்றங்கள் செய்ததால் அழிந்தான்" என்று கூறுகிறான். இச்செய்தியைக் கேட்டு மகிழவேண்டிய சீதை தன் மகிழ்ச்சியைக் காட்டாது பெரிதும் இதற்காக வருத்தம் கொண்டவள்போல் மௌனம் சாதித்து அனுமனை நோக்கி இதனைக் கூறுவாள், "இராமன் அழித்த இராவணன் மட்டும் குற்றவாளியல்ல; அவனை அழித்துவிட்டதைக் கொண்டு பெருமகிழ்ச்சி நீங்கள் கொள்வதில் பயனில்லை. குற்றவாளிகளான இராமன், சீதை, அனுமன் ஆகியோரும் அழிந்தால் தான் முழு நீதியும் முற்றுப்பெறும்; குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட்டார்கள் என்ற நியாயமும் முடிவு பெறும்" என்று கூறுகிறாள். உண்மையாகவே இராவணனது அழிவை சீதை மனப்பூர்வமாக விரும்பியிருப்பாளேயானால் இராமனது செயற்கரும் செயலை மிகவாகப் பாராட்டி இலங்கை வேந்தன் இறப்பிற்குத் தன்மகிழ்ச்சியையும், இன்பத்தையும் இராமன்பால், அனுமன்பால் காட்டியிருக்க வேண்டும். அதுவல்லாமல் இராவணன் மட்டும் குற்றவாளியல்ல,

★ ஆரியர்கள், திராவிடர்களை வெறுப்பின் காரணமாக அரக்கர், அசுரர், ராக்கதர் என்று கூறினார்களே தவிர, உண்மையிலே இப் பெயர் தாங்கிய மக்களினம் தமிழகத்தில், தென்னாட்டில் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

— 11-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதோரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 2 | 24-1-56 | இதழ் 32

கரையான்கள்

இந்தி கமிஷன் அதிகாரிகள் தமிழ்நாடு முழுதும் பவனி வந்தார்கள். தலைவர்கள் பலரைச் சந்தித்தார்கள், தலைவர்கள் என மக்களால் மதிக்கப்படாதவர்களையும சந்தித்தார்கள். "இந்தி பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியை இந்த நாட்டில் புகுத்தலாம்?-என்ற கேள்விகளைத் தான் கேட்டார்கள். பதில் கூறிய தலைவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளும் காலத்தைத் தான் கூட்டிக் குறைத்துத்தான் சொல்லியிருக்கிருர்களே தவிர, 'இந்தி நாட்டுக்குத் தேவையற்றது என்றே, இந்தி நுழைந்தால் தமிழ் அழிந்து படும் என்றே யாரும் கூறினார்களில்லை, இவ்வாறு கூறுவதற்கு அந்தத் தலைவர்களுக்குத் திறனில்லை, உரமில்லை என்பதை நாமறிவோம். ஆனாலும், தமிழ் காக்கும் பெருந்தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள்-தமிழ் எங்கள் ஆவி எனவான்முட்ட பேசித் திரிகிறவர்கள் ஏன் இவ்வாறு 'வெற்றிகர வாபஸ்' வாங்கவேண்டுமோ தெரியவில்லை.

ஆங்கில மொழிக்கு கால நிர்ணயம் செய்வோரை தமிழுக்குத் தொண்டு செய்வோர் என்று கூறிவிட முடியாது. எத்தனை ஆண்டுகள் ஆங்கிலத்திற்கு ஆயுளை விதிக்கிருர்களோ, அத்தனை ஆண்டுகள்தான் தமிழுக்கும் அவர்கள் ஆயுள் விதிக்கிருர்கள் என்றுதான் பொருள். உண்மையான தமிழ் பற்றல்ல அந்த நோக்கம். இதை அறிந்துதான் ஒரு காலத்தில் இந்தியைக் கட்டித் தழுவிய ஆச்சாரியார்கூட இப்போது இந்தியை விரட்டிட முயல்கிருர், ஏன்? தமிழின்பால் அவருக்கு அக்கரையல்ல! இந்திக்குப் பதிலாக சமஸ்கிருதம் தலைதூக்கி நிற்கவேண்டுமென்ற வெறிக்குணம். இந்த விஷ வாடைதான் இன்றைய ஆச்சாரியாரின் சொற்பொழிவுகளில் வீசிக்கொண்டிருக்கிறது.

'தமிழ் அழியப்போகிறது' என்ற பெருத்த-வலுத்த-எதிர்முழக்கத்திற்கு ஆறுதலளிக்கும் வகையில் ஆச்சாரியார் இப்போது ஒரு புதிய ராஜ தந்திரத்தைக் கையாண்டு வருகிருர். என்ன அந்தத் தந்திரம்? தமிழின் பெருமையையும், தமிழின் இலக்கியச் சுவையையும் மிகவும் அழகாக விமர்சிக்கிருர். ஏன் இந்தப் புகழ்ச்சி? தமிழின் சிறப்பு பிறமொழி நுழைவால் அழிந்து படாது என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிருர் நேற்று முன்தினம். இதிலிருந்து ஆச்சாரியார், இந்தி நுழைவைத் தடுப்பது தமிழின் நன்மைக்காக அல்ல என்பது நன்கு புலனுகிறது. இந்தி கெடுதி என்ருல் பிறமொழி நுழைவால் தமிழ் அழிந்து படாது என்று ஏன் கூறவேண்டும். ஏதோ ஒரு மொழியை புகுத்துவதற்கு ஆச்சாரியார் நினைக்கிருர்; அந்த மொழியைப் புகுத்திஞல் தமிழ் அழிந்துபடாது என்ற கருத்தை மக்களிடையே நிலைநாட்ட எண்ணுகிருர் என்பது வெள்ளிடை மலையாகிவிட்டது. அந்த மொழிதான் சமஸ்கிருதம்! இதை நம்மவர்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். ஆச்சாரியாரே இந்தியை எதிர்க்கிருர் என்று உச்சி குளிர்ந்தால் அது பேராபத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்.

இங்கிருக்கும் ஆச்சாரியாரும் சரி, இமயத்தினடிவாரத்திலிருந்து வரும் மந்திரிகளும் எந்தக் கோணத்திலிருந்தாவது தமிழை அரித்துத் தின்ருல் போதும் என்ற கெடுமனத்தோடுதான் அலைகிருர்கள்.

சென்னை வந்துள்ள தபால்துறை துணைமந்திரி ராஜ்பகதூர் அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக புதுப்புது வகையில் வெவ்வேறு பாணியில் பேசிக்கொண்டு வருகிருர்.

"தென்னுட்டுத் தலைவர்களின் படங்களை தபால் பில்லைகளில் பிரசுரிக்கப்போகிருேம். போனமுறை சர்க்காரின் அவசர புத்தியால் தவறிவிட்டது"-என்று பேசியிருக்கிருர்.

இது தமிழர்களின் தலையைத் தடவ உபயோகிக்கும் புகழ்ச்சி மொழிகளாகும். இந்தப் புகழ்மாலை நல்லெண்ணத்தினின்று பிறந்ததல்ல; இந்தியை நுழைக்க தமிழர்களிடம் எப்படிப்பட்ட கணவாய்களை ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்பதற்கு அவிழ்த்துவிடப்பட்டதாகும். கெண்டையைப் போட்டு விராலை இழுக்கும் முதுமொழி தமிழில் பிறந்ததுதான். அதை நாம் மறந்துவிடப் போவதில்லை. எத்தனை எத்தனை பனிக்கட்டிகளை நம் தலையில் வைத்தாலும் "தமிழ் எம் உயிருக்கு நேர்" என்பதை வடவர் பிற்பாடு உணரத்தான் போகிருர்கள்-இது உறுதி.

ஆனாலும் நம்மிடையே ஊர்ந்து திரியும் கரையான்களிடம் நாம் எச்சரிக்கையாகத்தான் நடந்துகொள்ளவேண்டும்.

மனைவிக்கு...

— நாகமுத்தையா —

அன்புக் கமலாவிற்கு,

எகப்பட்ட அடைமொழிகள் சேர்த்து தூது பாடினார்களே புலவர்கள், அவர்களைப்போல ஒவ்வொரு அங்கத்தையும் தனித்தனியாக வருணித்து-தாமரை போன்ற முகமுடையவளே, அம்முகத்தில் எள்ளுப் பூப்போன்ற மூக்கை உடையவளே, முத்துப்போன்ற பல்லுடையவளே, குவளைப் பூபோன்ற கண்ணை உடையவளே, என்றும் காந்தம் போன்ற மேனியுடையவளே, கதலிபோன்ற தொடையுடையவளே, மாந்தளிர் போன்ற நிறமுடையவளே என்றும் கூட்டிக் குறைத்துச் சொல்லி உனக்கு ஒரு நீண்ட ராமாயணம் எழுதலாம் என்று தான் விரும்பினேன், படித்துப் படித்துப் பண்பட்ட உனக்கு அது சுத்தப் பத்தாம்பசலித்தனமாகத் தோன்றினாலும் தோன்றலாம் என்றெண்ணி அஞ்சியே அன்புக் கமலாவிற்கு என்று மட்டும் அழைத்துள்ளேன்.

நீ எழுதிய கடிதம் கிடைத்தது. கடிதமா அது?-அது பெரிய போர்க்களத் தொழிற்சாலையாயிற்றே! ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு ஆயுதமல்லவா? ஆம்! உன் ஆயுதச்சாலை கடித உருவிலே வந்து சேர்ந்தது.

சீலம் கெட்டவனே என்று என்னை ஏசி இருக்கிருய், நீ தமிழ் படித்தவள். நளவெண்பா படித்திருக்கிருய். அதில் பழக்கமுண்டு என்பதைத் தெரியப்படுத்திவிட்டாய். "கடல்கரை புரண்டாலும் புரண்டு ஏறும்; வேதம், நெறி பிறழ்ந்தாலும் பிறழும்; உலகம், நடுநிலைமை தவறினாலும் தவறும். செங்கோல் ஒச்சும் மன்னர்கள் சீலம் (ஒழுங்கு) தவற மாட்டார்கள்; சொன்ன சொல்லை பொய்யாக்கமாட்டார்கள்" என்ற பாட்டை நினைவுபடுத்திச் "சீலம் கெட்டவனே" விரைவில் வருவதாகச் சொல்லி வேசியர் வீட்டில் உலவுகிருயே" என்று எழுதி இருக்கிருய். உன்னைப் பிரிந்து வரும்போது சரியாக ஓராண்டு சென்றதும் திரும்பி வந்துவிடுகின்றேன் என்று சொல்லிவிட்டுத்தான் வந்தேன். 'சுவரில் முந்நூற்று அறுபத்தைந்து கோடுகள் போட்டுக்கொள்வேன். அதில் நாளொன்று கழிந்தால் கோடொன்று அழியும். இங்ஙனம் கோடுகள் அனைத்தும் அழிந்த பிறகு அதாவது சரியாக ஓராண்டு முடிந்ததும் நான் திரும்பி வந்து சேராவிட்டால் செத்து மடிந்துவிடுவேன், என்று நீ கூறினாய்.

நீ சொன்ன கணக்குப்படி பார்த்தால் இன்றோடு நூற்றுபத்துக் கோடுகள் அழிந்திருக்க வேண்டும். இரு தடவைகளுக்குமேல் கோடுகளை அழித்து அழித்து உன் கைவிரல்கள் மட்டும் தேய்ந்து போயிருக்கலாம் என்றெண்ணி வருந்தினேன். ஆனால், நீயோ மேனியே தேய்ந்துவிட்டது என்று எழுதுகிருய். மிக மிக வருந்துகிறேன்.

'வேசியர் தொடர்பை அறுத்தொழித்துவிட்டு வந்து சேரவேண்டியது, என்று அரச கட்டளை பிறப்பித்துள்ளாய். என் ராஜ்யத்திற்கு நீ தானே அரசி, எனவே உன் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறேன். ஆனால் ஒன்று......

வேசியர் உறவை அறுத்தொழித்துவிட்டு வா என்றாயே; அது தேவையில்லாத கட்டளையாகிவிட்டது. ஏனென்ருல் வேசியரின் வலையில் வீழ்ந்தவன் ஒருநாள் வெளியேறியே ஆகவேண்டும் என்பதுதான் உலகம் கண்ட முடிவு.

விளக்குப் பிரகாசமாக ஒளி தரும்போது மேற்பார்வைக்கு அணையாத ஜோதியாகத் தான் தோன்றும். ஆனால் எண்ணெய் தீர்ந்துவிட்டால்...! ஒளி மங்கும்; திரி மட்டும் தானாக எரியும். இதை நீ பார்த்திருப்பாய், அனுபவத்தில் அறிந்துமிருப்பாய், இதே கதிதான் பரத்தையர் வீடு செல்லும் மனிதர்களுக்கும்!

பணம் இல்லை என்று தெரிந்ததும் பசப்பு மொழிகள் மறைந்துவிடும்! படுக்கை அறை தனியாகிவிடும். அந்தப் பறிகொடுத்த பேதை தனியே கிடந்து வருந்தி கருகி வாடவேண்டியதுதான். எண்ணெய் இல்லாதபோது விளக்கொளி மங்கிவிடுவது போலத்தான் பணம் இல்லாத போது பரத்தையின் அன்பும் மறைந்துவிடும்.

"விளக் கொளியும் வேசையர் நட்பும் இரண்டும்
துளக்கு அற நாடில்வேறு அல்ல-விளக்கொளியும்
நெய் அற்ற கண்ணே அறுமே, அவர் அன்பும்
கையற்ற கண்ணே அறும்."

என்பது நாலடியாரில் வரும் பாட்டு, இப்பாட்டின் உண்மையை இப்போது தான் உணர்கிறேன். எனவே தான் நீ பிறப்பித்தாயே கட்டளை 'தொடர்பை அறுத்துவிட்டு வரவேண்டியது' என்று. அது பயனற்றதாகி விட்டது என்று கூறுகிறேன். ஏனெனில் என் தொடர்பு அறுந்து விட்டது. என்னிடம் 'பசை' இல்லை என்பதை உணர்ந்ததும் அந்தப் பசப்புக்காரி, காணம் இல்லாதவன் என்று கையை உதறிவிட்டாள் - தொடர்பை அறுத்தெறிந்துவிட்டாள்!

நல்ல வேளையாக ஒரு படலம் முடிந்தது. கண்டம் தப்பினேன், கண்மணியே விரைவில் வந்து சேருகிறேன், பொறுத்தருள்.

[illegible].

எழுத்தாளன் காதலி

ருஷ்ய நாட்டுச் சிறுகதை எழுத்தாளன் ஆண்டன் செக்காவ் இந்த சோக காவியத்தின் தலைவனாக வாழ்ந்து மறைந்தான். வாழ்வு முழுதும் அவனது விழிகளிலே படிந்திருந்த ஏக்கம் பல வரலாற்றாசிரியர்களுக்கு பெரும் புதிராயிருந்திருக்கிறது.

செக்காவிற்கு இனிய இதயம் படைத்த காதலி ஒருத்தி இருந்தாள், லிடியா ஆவிலோவ் என்பது அந்த அழகியின் பெயர். லிடியா இறந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், அவள் எழுதியிருந்த நினைவுக் குறிப்புகளை 1947-ல் மாஸ்கோ வெளியீட்டகம் பிரசுரித்தது. செக்காவின் இதயகன்னி எழுதிய அந்த நூலின் சில இதழ்கள் இங்கே தரப்படுகின்றன.

கல்வெட்டுக்கள் தெரிவிக்காத காதலோவியம் இது.

சிறுகதை எழுத்தாளன் ஆண்டன் செக்காவ்—அவனது இதயத்திலே சித்திரமாகிப்போன எழிலரசி லிடியா இவர்களிடையே அரும்பவிழ்ந்த ஆசைக் கனவுகளின் வேதனை விருத்தாந்தம்: அந்த காதல் வாழ்வில் முத்தங்களின் இனித்த ஒலி இல்லை; பெருமூச்சும் கண்ணீரும்தான் நிழலிட்டன!

அது உணர்ச்சிகளின் கதை; உள்ளத்திலே குமிழிட்ட ஆசாபாசங்களின் கதை, அந்த அழகிய சுகந்த மொட்டுக்களை சம்பிரதாயங்கள் புதைகுழியிலே விட்டெறிந்தன! வாழ்வு முழுதும் செக்காவின் விழிகளில் ஏக்க உணர்ச்சிதான் ததும்பியிருந்தது. அவன் பிணத்திலே மண்ணை இறைத்த பிறகு அந்த சோகத்தின் புதிரை புரிந்து கொண்டது, உலகம்!

★

1889-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு நாள், ஆண்டன் செக்காவ் பீட்டர்ஸ்பர்க்கில் வந்திருக்கும் சேதி தெரிவித்து

இரா. இளஞ்சேரன்

லிடியாவிற்கு அவள் சோதரி கடிதம் எழுதியிருந்தாள். லிடியா செக்காவை பார்த்ததில்லை: சுவையூறும் அவனது எழுத்தோவியங்களை திரும்பத் திரும்ப படித்திருக்கிருள். அந்த இலக்கியங்களின் மேன்மையில் அவள் இதயத்தையே காணிக்கையாக்கியிருக்கிருள்! அழகிய சிறுகதைகளால் வாழ்வின் உணர்ச்சிகளில் ஒளி பெய்த சிந்தனையாளனை தரிசிக்கும் வாய்ப்பை இழக்க லிடியா விரும்பவில்லை.

அக்காளின் கணவர் ஸெர்ஜி, பீட்டர்ஸ்பர்க்கில் புகழ்பெற்ற பத்திரிகையாசிரியர். எழுத்துலகத் தொடர்பில் செக்காவிற்கு அவர் தோழர். இருவரும் புத்தகசாலையில் பேசிக்கொண்டிருந்தபோது வியப்பு படிந்த விழிகளோடு அங்கே லிடியா வந்தாள். ஸெர்ஜி செக்காவிற்கு அவளை அறிமுகப்படுத்தினுர். அந்த முதல் சந்திப்பின் இனிமை வாழ்வு முழுதும் தேங்கித் தித்தித்தது!

அவன் இலக்கியத்திற்கே புது உயிர் பெய்த மேதை—அவள் அவனது எழுத்திலே நெஞ்சத்தைக் கொள்ளை கொடுத்த லிடியா—ஒளி தவழும் கண்களில் ஆசையும் தவிப்பும் அலையாட, அந்த சந்திப்பில் பனிப்பருவ நிலாபோல சோகம் பின்னணி செய்தது. அதனை லிடியாவே எழுதுகிருள்:

அவர் பேசவில்லை. நீல விழிகளில் ததும்பிய ஏக்கம் என் இதயத்திலே பூமொட்டுக்களை மலர்வித்தன. பெருக்கெடுத்த என் உணர்ச்சிகளில் ஆசையின் உடையாத ஒளிக்குமிழிகள்...! நான் சிலையாக நின்றேன்.

"திரும்பவும் இங்கே வருவேன். நாம் சந்திப்போம்" புன்சிரிப்போடு செக்காவ் என்னிடம் விடை பெற்ருர்.

லிடியா மணமானவள். செக்காவிற்கு அவள் ஒரு இழந்த சொர்க்கம்.

பீட்டர்ஸ்பர்க் நகரத்தில் சரித்திரத்தின் நெருப்பு தகிக்கும் ஏடுகள் எழுதப்பட்டிருக்கின்றன. புரட்சிவாதியின் ரத்தமும், கொழுப்பேறிய சீமானின் மதுவும் அந்த நகர மண்ணிலே ஒழுகியோடியிருக்கின்றன. ஏழையர் வாழ்வில் விளக்கேற்றி வைத்த எத்தனையோ புதுமை விரும்பிகளை ஆதிக்க அரசு அங்கே பிணமாக்கி எறிந்திருக்கிறது. அரைநூற்றுண்டுக்குமுன் பீட்டர்ஸ்பர்க்கின் புழுதி நிரம்பிய இதே தெருக்களில் அழகி அன்னுகோர்வினல் புறக்கணிக்கப்பட்ட டோஸ்டாவஸ்கி அலைந்திருக்கிறன்! ஆண்டன் செக்காவின் இழந்த காதலின் முதல் படலம் பீட்டர்ஸ்பர்க்கில்தான் விரிந்தது.

லிடியாவை மணந்திருந்த மைக்கேல் அரசாங்க அதிகாரி: எழுத்தாளர்கள் எல்லோருமே 'சோம்பல் வேதாந்திகள்' என்பது அவன் நினைப்பு. மனைவியின் எழுத்துப் பணியும், இலக்கிய ஆர்வமும் அவனை கொதிப்பேற்றியிருந்தன. குழந்தையைப் பணியாளர்களிடம் விட்டுவிட்டு ஒரு வெறும் மனிதனை சந்திக்கச் சென்றதற்காக லிடியாவிடம் மைக்கேல் ஏதேதோ பேசி கூச்சலிட்டான்! விழிகளிலே நீர்புரள குமுறிய வேதனையோடு லிடியா விம்மினுள். மனம்போல வாழவேண்டிய அவளை சந்தர்ப்பங்கள் கூண்டுக்கிளியாக்கியிருந்தன. நீதித்தராசு சரிந்துவிடாமலிருப்பதற்காக சமுதாயம் குவித்துப் போட்டிருக்கும் நியதிகளுக்காக லிடியா தணலில் வாழ்ந்தாள்! காலம், அந்த அழகு முல்லையை கள்ளிச்செடியிலே படரவிட்டிருந்தது.

★

மூன்று வசந்தங்கள் பூக்களை குடை சாய்த்தன. செக்காவின் பேனுவிலிருந்து பிறந்த ஒவ்வொரு எழுத்தையும் தாயகமண் பெருமையோடு வரவேற்றது. இலக்கிய வானத்தில் அவன் துருவ நட்சத்திரமாக ஒளி விட்டான்! லிடியா மூன்று குழந்தைச் செல்வங்களின் அன்னை இப்போது. செக்காவின் நினைவுகள் அவளது உள்ளத்திலிருந்து உதிர்ந்திடவில்லை. செக்காவை லிடியா நினைத்தாள், கண்ணீர் ததும்ப. அவர்களது முதல் சந்திப்பு கனவுபோல—சோகமயமான கவிதைபோல நெஞ்சிலே நிரம்பித் ததும்பியது.

1892-ல் ஸெர்ஜி தமது பத்திரிகையின் இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை கொண்டாடினுர். விழாவின் போது லிடியா செக்காவை சந்தித்தாள்.

"எதிர்பார்க்காத சந்திப்பு இது!"

"நான் எதிர்பார்த்தேன், லிடியா."

செக்காவின் உதடுகளில் புன்சிரிப்பு நெகிழ்ந்தது. இதயத்தின் நினைப்புகளையெல்லாம் அவளிடம் கொட்டிக் குவிக்க ஆசை துடித்தது.

"இப்போதெல்லாம் வாழ்க்கை எனக்கு புதிதாக மலர்ந்திருக்கிறது லிடியா...எப்போது உன்னை பார்த்தேனே அன்றிலிருந்து இந்த விசித்திரமான மாறுதல்..."

"என்னுல் எதையுமே மறக்க முடியவில்லை. இதயத்தின் கனவுகளை எங்கே புதைப்பது?

"எண்ணற்ற இரவுகளை கண்ணீர் விட்டே கழித்திருக்கிறேன்." ஏக்கத்தால் கனலாகிப்போன லிடியா வாழ்வின் சோகமெல்லாம் சொலலிலே இழைய பேசினுள்.

அந்த சின்னஞ் சிறு பெண் தன் எண்ணத்தை அள்ளிய புதுமையை செக்காவ் வியந்தான். அவன் வாழ்க்கையே புயலின் கதை......அதிலே கிடைத்த பூங்கொத்து லிடியா. எழுத்தால் எல்லோரையும் கவர்ந்த செக்காவ் எங்கிருந்தோ வந்த அழகோவியத்திடம் நெஞ்சம் இழந்து நிலையின்றி தவித்தான். சோகமயமான வரலாற்றின் சுவைமிக்க பகுதிகளின் தலைவியான லிடியா எரிதழலில் விழுந்த பசுந்தளிராக வாழ்ந்தாள்! அவன் எழுத்தை ஆள்வோன்—அவளோ எழில் தந்த இன்பம்...மோகனமான அந்த ஆசைப் பிணைப்பில் 'சம்பிரதாயங்கள்' புழுக்கூடத்து நிகழ்த்தின.

செக்காவின் சிந்தனையிலே ஆயிரமாயிரம் அழகு கற்பனைகளின் பூமொட்டுகள் விரிந்தன.

"நிலவும் கடலும் கதை பேசும் சீதளத் திருநாட்களில் நீயும் நானும் வான முகடுகளில் உலவினேம். தாரகைகள் சிரிக்க, தென்றல் பூச்சொரிய காதலின் தித்திப்பிலே நாம் திளைத்திருந்தோம்...எல்லாமே கனவு! தன்னந் தனியானவனுக்கு உலகம் ஒரு பாலைவனம், லிடியா..."

அழகிய கவிதைவரிகள் போல—உணர்ச்சிகளின் பிரளயமாக அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

திருமணத்திற்கு முன் இதயம் நிரம்பிய ஆசைமலர்களோடு லிடியா மாஸ்கோவில்தான் இருந்தாள். அந்த வட்டாரத்திலே செக்காவும் வாழ்ந்தான். அப்போது இந்த சந்திப்பு நிகழ்ந்திருந்தால் துன்பியலின் சரித்திரமே பிறந்திருக்காது!

"மூன்று வருடங்களுக்கு முன் நாம் சந்தித்தபோது உனக்கு வயது இருபத்தைந்து. லிடியா... அப்போது நீ எத்தனை அழகாயிருந்தாய்!"

செக்காவ் பேசிக்கொண்டிருந்தான். அவனது நீல விழிகளில் லிடியாவின் பார்வை மொய்த்துக் கிடந்தது. பெருமூச்சும் கண்ணீரும் அங்கே அமைதியாக விழுந்து நெகிழ்ந்தன.

இவர்களது இரண்டாவது சந்திப்பை கருவியாக்கி செக்காவின் இலக்கிய எதிரிகள் புதுப் புது கதைகளை பின்னி விட்டார்கள்! எழுத்துலகில் குறுகிய காலத்தில் செக்காவ் தேடிக்கொண்ட பெரும் புகழ் சில வைரிகளையும் உருவாக்கியிருந்தது. எல்லைமீறி குடித்துவிட்டு, போதையின் சுழற்சியில் செக்காவ் லிடியாவைப்பற்றி ஏதேதோ புலம்பியதாக பொய்யான சேதிகள் அவிழ்த்து விடப்பட்டன.

— 9-ம் பக்கம் —

கடமை புரிவோம்!

புதுமையைப் படைப்பதில் ஆர்வமும், பழமையைப் புதைப்பதில் ஆர்வமும் கொண்டவர்கள் பண்டைத் தமிழ் மக்கள். அர்த்தமற்ற குருட்டுக் கொள்கைகளையும், வரட்டுத் தத்துவங்களையும் விரட்டியடித்து அறவாழ்வு வாழ்ந்தவர்கள் அவர்கள். அக்கிய ருடைய ஆண்டவன்களும், வழிபாடுகளும் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்படுமுன்பே அறிவைப் போற்றி, பெற்ற தாயையும், வளர்த்துப் பெரியவனாக்கிய தந்தையையும் வழிபட்டு வந்த அறிவியக்கவாதிகள் அவர்கள். அறிவுக்குப் புறம்பான எந்த கொள்கைகளையும் கண்ணை மூடிக்கொண்டு கட்டியழும் சுபாவம் அவர்களிடம் இருந்ததே இல்லை.

காடுகளிலும், மலைக்குகைகளிலும் மிருகத்தோடு மிருகமாக உண்டு உறங்கிக்கிடந்த மனிதன், இன்று வானுயர்கூட கோபுரங்களையும், வாய்க்கு உருசியான உணவுகளையும், கண்ணைக் கவரும் ஆடைகளையும் கண்டுபிடித்திருக்கிறான்.

இன்று அவனுக்கும்-மிருகத்திற்கும் இடையிலே ஆயிரக்கணக்கான வேற்றுமைகள் நிலவுவதை நாம் காண்கிறோம்.

தோன்றிய காலந்தொட்டு விலங்கினங்கள் எதைப் புசித்தனவோ, எதை நினைத்தனவோ, எதைச் செய்தனவோ அவற்றையேதான் இன்னும் இந்த நாகரிகம் முதிர்ந்த இருபதாம் நூற்றாண்டிலும் செய்து வருகின்றன. மேலும் எண்ணற்ற ஊழிக் காலத்தின் பின்னும் அவை நினைத்தும், செய்தும், புசித்தும் உயிர்வாழப் போகின்றன.

ஆனால் மனிதனோ இதற்கு முற்றிலும் மாறானவன். சிந்தனையில் புதுமை, செயலில் புதுமை, பழக்க வழக்கங்களில் புதுமை, சகலவற்றிலும் ஒரு புதுமையைக் காணவேண்டுமென்று துடிக்கும் ஒரு ஜீவன் அவன். இந்த ஆர்வ உணர்ச்சி தான்-அறிவுத் தாகம்தான் மனிதனை விலங்குகளினத்திலிருந்தும், விலங்கையொத்த அறிவுபடைத்த பழமை விரும்பிகளிடத்திலிருந்தும் வித்தியாசப்படுத்துகிறது.

பட்சியினம் தோன்றிய காலத்தில் தோன்றிய தூக்கணாங் குருவி பட்சியைவிட வேகமாக மனிதன் பறக்கப் பழகிக் கொண்ட இந்த காலத்திலும்கூட, அன்று அமைத்தது போலவே இன்றும் தன் கூட்டை அமைத்து வருகிறது. ஆனால் மனிதனோ குகை வாசத்தில் ஆரம்பித்து, குச்சுக் குடில்கள் அமைத்து, கூடாரங்களும், வீடுகளும் கட்டி, மாட மாளிகைகளும், மதி தவழும் நிலா முற்றங்களும் கட்டி வாழ்ந்து வருகிறான். இந்த வளர்ச்சிக்கு காரணம் எது?

புதுமையைக் கண்டு பிடிப்பதில் அவனுக்கு இயல்பாகவேயுள்ள ஆவலும், ஆசையும் தான் அதற்குக் காரணம் ஆகும்.

முதன் முதலாக உலகில் தோன்றிய கொடும்புலி, தன் பசியைப் போக்கிக்கொள்ள புள்ளிமானின் செங்குருதி கொட்டும் மாமிசத்தை எப்படி கிழித்துப் புசித்ததோ அப்படியேதான் இன்றும், அது புசித்து வருகிறது. ஆனால் மனிதனோ காட்டுக் கிழங்குகளையும், கந்தமூலங்களையும் திரும்பத் திரும்பத் தின்று கொண்டிராமல், தானியங்களை விதைத்து, அறுவடை செய்யவும், இதமான உணவை நெருப்பின் உபயோகத்தினால் பாகம் செய்யவும் பயின்று கொண்டிருக்கிறானே, இதற்கும் புதுமையின்மீதுள்ள மோகமே காரணமாகும்.

மண்ணில் தோன்றிய மக்கள் குலத்தில் புதுமை பிறந்தது தமிழனிடத்தில் - தமிழகத்தில் என்று நில - மொழி, இன ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

ஆங்காங்கு ஆராய்ச்சிகளின் போது அகப்படும் பண்டைக் கால பொருட்கள், சிற்பங்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள் தமிழ் மக்கள் பூர்வீக வரலாற்றையும், அவர்கள் வாழ்ந்த சீரையும், சிறப்பையும் தெரியப் படுத்திக்கொண்டு வருகின்றன.

தமிழ் மக்களின் இரத்தத்தில் இயற்கையாகவே செறிந்து கிடந்த இந்தப் புதுமையான புதுமைதான் அவர்களை 'பொங்கல் விழா' கொண்டாடச் செய்தது. பழமையைக் களைய வேண்டும். புதுமையைப் போற்ற வேண்டுமென்ற தமிழனின் அரிய பண்பிலிருந்து பூத்த புதுமைத் திருநாள்தான் பொங்கல் புதுநாள்.

மகேஸ்வரன் மங்கையை மணம் புரிந்தநாளோ மால்மருகன் தினைப்புனத்து வள்ளியை திருடிச் சென்ற திவ்விய திருநாளோ அல்ல. ஏரைத் தாங்கி, பாரைக் காக்கும் மன்னர்களான உழவர்கள், வருடம் முன்னூற்று அறுபத்தைந்து தினங்கள் பட்ட கஷ்டத்தை மறக்கும் மதுரநாளாக மலர்ந்தது அது.

காடு வெட்டி, கடிய நிலம் திருத்தி, உழுது, பயிர் நாட்டி, வேலி கட்டி, நீர்ப் பாய்ச்சி, களை பிடுங்கி, புது விளைவு காண்கிறான் உழவன், அவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. உடல் இன்பத்தால் பூரிக்கிறது. முதன் முதல் வயலில் கொய்யும் கதிர்களை "புதிர் எடுத்தல்" என்றும், அவர்கள் ஆக்கி உண்டு மகிழ்வதை "புதிருண்ணல்" என்றும் கொண்டாடினான். உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்த்தும் மனோபாவத்திற்கு பொங்கல் விழா ஓர் எடுத்துக் காட்டாகும்.

தமிழன் உடலோடு, உணர்வோடு ஒட்டிக்கொண்டிருந்த இப் புதுமை மோகம் இடைக் காலத்தில் தடைப்பட நேர்ந்தது. புதுமை ஆர்வத்தால் நாளும் பொழுதும் புதுப்புது பொருட்களை கண்டுபிடித்து வந்த தமிழன் "ஆராய்ச்சி செய்வது ஆண்டவனுக்கு அடுக்காது, பகுத்து அறிந்து பல்லுயிர் ஓம்புவது பரமனுக்கு பிடிக்காத செயல். பாவ காரியம், பழமையை அப்படியே நம்பவேண்டும், நம்பாவிட்டால் ரௌரவாதி நரகத்தில் விழ தயாராய் இருக்க வேண்டும்" என்ற அர்த்தமற்ற அச்சத்திற்கு அடிமைப் பட்டான், வில்லுக்கும், வேலுக்கும் அஞ்சாத வீரகுலம், வெறும் நீற்றுக்கு அஞ்சி அடங்கிற்று.

சக்கிமுக்கிக் கல்லைத் தேய்த்துத் தீமூட்டி, அதைச் சேர்த்துத் தீபம் ஏற்றி, வைக்கத் தெரிந்துகொண்ட தமிழன் செயல் குன்றி நின்றான்.

நீரில் செல்ல படகும், நிலத்தில் ஓட சக்கரமும் சமைத்த அறிவு இருட்குகைக்குள்ளே சென்று புகுந்தது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அவன் வகுத்துச் சென்ற வளர்ச்சி தடைப்பட்டது. அன்றோடு அவன் புதுமை யார்வமும் குன்றிற்று.

இவ்வுலக வாழ்க்கைக்கு அதி முக்கியமான தேவைகளை தேடிக்கொள்வதில் நாட்டம் செலுத்துவதை மறந்து, கண் காணுத ஒரு கற்பனை உலகை ஆராய்வதிலும், நம்பாதவன்றி நம்பிக் கொண்டழுவதிலும், எண்ணுதனவெல்லாம் எண்ணுவதிலும் "வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்", "பிறவாவரம் தாரும்" என்று பிதற்றுவதிலும் காலம் கடத்தினான்.

ஏரைப் பிடிக்கும் கூட்டம் இழிந்த சாதியினர் என்று பேசும் நிலை பிறந்தது.

உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்.

தொழுதூண் சுவையின்
உழுதூண் இனிது

சுழன்றும் ஏர் பின்னதுலகம்
அதனுல்
உழந்தும் உழவே தலை.

உழுவாருலகத்தார்க் காணி.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்.

இத்தனை சிறப்புக்கும், பெருமைக்கும் உரித்தான உழவுத் தொழில் பாவகரமானது. அத்தொழிலைச் செய்பவர்கள் சண்டாளர்கள், சூத்திரர்கள், வேசி மக்கள். அவர்கள் நாயினும் கேடானவர்கள். அவர்களிடத்தில் எந்தக் காலத்திலும் வாங்கி உண்ணக்கூடாது என்று பேசவும், நடக்கவும் கூடிய சூழ்நிலை தோன்றிற்று.

"ரிதாம் ருதாப்யாம் ஜீவேத்து
ருதேன ப்ரம்ருதேனவா
ஸத்யாம் ருதாப்யாமதவா
நஸ் வவ்ருத்யாக தாசன"
(மனு)

இதன் பொருள்: அறுவடையான நிலத்தில் சிந்திக் கிடக்கின்ற தானியங்களை சேர்த்து உயிர்வாழ்வதே ரிதம். பிச்சையேற்காமல் யாரேனும் கொடுக்கிற பொருளைப்பெற்று ஜீவனம் செய்வது அமிர்தம். பிச்சை சேர்த்து உண்ணுவது மிருதம்.

செ. இராசதுரை

உழுது பயிரிட்டு அதனால் வரும் பொருளை உண்பது பிரமிருதம். வியாபாரம் செய்வது சத்தியான்ருதம். அடிமையாகிய சூத்திரன் (தமிழன்) நாய்க்குச் சமானமானவன், ஆகையால் அவனுடைய தொழிலினால் எக்காலத்திலும் ஜீவனம் செய்யலாகாது. இது மனு நீதி.

அறிவின் நிலைக்களனாக ஆய்வின் கலைக்கூடமாக விளங்கிய தமிழகம் அடிமைத்தனத்தில் சிக்குண்டது. பகுத்தறிவுக் கதிர்கள் பாவிய நாட்டில் அந்தகாரம் சூழ்ந்துவிட்டது. உத்தமர்கள் உலவிய திருவிடத்தில் மிருகத்தைவிடக் கொடியவர்கள் தோன்றி விட்டார்கள், மனிதத் தன்மை அரசோச்சிய அகங்களிலே அகங்காரம், ஆணவம் தலைதூக்கி நிற்கிறது.

— 12-ம் பக்கம் —

S எஸ் மார்க்

"கம்பர் காட்டும் காட்சி!"

கம்பநாடன் இயற்றிய இராமாவதாரப் பெருங் காப்பியத்தின் சிறப்பைக்கூற முற்படுவோர், அதிலே காணப்படும் கவிச்சுவையே தலை சிறந்தது எனக் கூறிப் போற்றுகின்றனர். அவ்வாறெனின் அதனை எவரும் ஏற்பர். இராமகாதை பொருள், இனிமை, சொல்நயம், செறிந்த தொடர்நிலைச் செய்யுள் என்பதனை யாரும் இதுவரை மறுத்திலர். அவ்வாறின்றி இராமாவதாரப் பெருங்காப்பியம் கடவுட் காதை; அக்கதைத் தலைவன் இராமபிரான் மக்களால் வணங்கப்பட வேண்டிய தெய்வத் தன்மையுடையவன் என்று கூறுதல் எவ்வாறு பொருத்தமுடையதாகும்? கம்பர் கடவுளாகக் கொண்ட இராமனிடத்திலோ, அக்கதையில் நமக்கு அறிமுகப்படுத்தப்படும் மற்றைய காப்பிய மாந்தர்களிடத்திலோ, போற்றத்தக்க சிறந்த பண்பு இல்லை. அக்காப்பியத்தைக் கற்கும் மக்கள் நல்வழி படக்கூடிய உயர்ந்த கருத்தினையாவது கொண்டிருக்கிறதா? என ஆராயும்போதுதான் அக்கதையினைப் பற்றிய விவாதம் எழுகின்றது.

கம்பராமாயணத்திலே காணப்படும் முரண்பாடுகளை எடுத்துக் காட்டுவோர் கவிச்சுவையறியாதார் அல்ல அதனைக் குறைகூற வேண்டும் என்ற கருத்துடன, அடிப்படையற்ற வீண்விவாதங்கள்புரிவோரும் அல்ல. அக்காதையில் மக்களைத் திருத்தி நன்னெறியிற் செலுத்தத் தக்க உயர்ந்த கருத்துக்களும் இல்லை, கடவுட்டன்மையும் இல்லை என்பதே அவர்கள் கூற்று. கம்பராமாயணத்தின் கவிச்சுவைக்காகவே அக்கதைத் தலைவன் இராமனைக் கடவுளென வழிபடுவது அறிவுடைமையல்ல.

'இராமாயணம்' ஒரு சாதாரண கற்பனைக் கதை என்ற அளவில் மட்டும் அதனைப் போற்றுவோர் கூறவில்லை. இராமபிரான் மானிட உருவில் இம் மண்ணிற் தோன்றிய கடவுள். இந்தியத் துணைக்கண்டத்தில் அயோத்தி நகரத்தைத் தலைநகராகக் கொண்டு அவர் ஆண்ட ஆட்சியினை அடிப்படையாகக் கொண்ட சரித்திரக் கதைதான் இராமாயாணம் என்று மக்களை அறிவிலிகளாக்குவதை முற்போக்கு எண்ணம் கொண்டோர் எதிர்க்கத்தான் செய்வார்கள். இராமகாதையின் சிறப்பைப் போற்றுவோர் சிந்தை தெளிவுபெற கம்பர் காட்டும் காட்சியினைக் காணட்டும். எத்தகைய அருவருக்கத்தக்க காட்சியைக் கம்பர் நமக்குக் காட்டுகிறார் என்று பார்த்துவிட்டுப் பின்பு கடவுட் காதையாக இராமாயணம் மதிக்கப்படுவதற்கேற்ற தகுதியுடையதா? என முடிவு கொள்வோம்.

இராமகாதையிலே கம்பர் கலந்துள்ள காமச்சுவையை 'கம்பரசத்தில்' 'அண்ணா' அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இங்கே எடுத்துக்காட்டப்படுபவை அவர் எடுத்துக்காட்ட வாய்ப்பின்றி விட்டுவிட்டவைகளில் ஒருசில.

கம்பர் கார்முகிலிலே மூழ்கி யெழும் முழு மதியினையும் அதனை முத்தமிட எழும்பி ஏமாறும் கடலலைகளையும் நெல்லை ஈயும் வளங்குன்றா வயல் வரப்புகளையும் முல்லை மலர் சிந்திக்கிடக்கும் வண்ணமலர் சோலைகளையும் காட்டுகிறார். செந்தாமரைப் பூத்த குளங்களையும் அந்தத் தாமரைகளிலே தன் குஞ்சுகளைத் தாலாட்டும் செங்கால் நாரைகளையும் காட்டுகிறார். இதனை எத்தனை முறை எண்ணினாலும் இக்காட்சி நம் மனக்கண் முன்னே தோன்றுகிறது. ஏனைய பாவலர்களைவிட கம்பர் வெளிப்புறக் காட்சிகளை அற்புதமாக அமைத்துப் பாடியிருக்கிறார் இங்கே.

இராமபிரானுக்கு மிதிலையில் திருமணம் நடக்கப்போகிறது. தசரதர் தம் படை பரிவாரங்கள் புடைசூழ மிதிலையை நோக்கி விரைகிறார். அவருடன் வந்த ஆடவரும் பெண்டிரும், களைப்பு நீங்கிட வழியிலே உள்ள ஒரு சோலையில் தங்குகின்றனர். நறுமணம் வீசும் பலநிற மலர்கள் பூத்துக் குலுங்க அவற்றின்மீது தெம்மாங்கு பாடி தேன் சேர்க்கும் வண்டுகள் நிறைந்த சோலை. பட்டுத்திரை போன்ற பசும்புல் தரை இடையே பளிங்கு நீர்த்தடாகங்கள். அவற்றிலே படகுபோல் மிதக்கும் தாமரை மலர்கள் நிறைந்த சோலை. ஆகா!! கவியின் கற்பனைத்திறன் என்னே! என்று போற்றுகிறோம். பின்பு இரவு வருகிறது. வெண்ணிலா வானவீதியிலே உலர்ந்து வருகிறது. இதனைக் காணுகின்ற இரு இளங்காதலர்களின் உள்ளத்திலே இன்பம் பொங்குகிறது. இதோடு கம்பர் நம்மை விட்டுவிடவில்லை. கொலைத் தொழிலே ஓர் உருவமெடுத்து வந்தார் போன்ற கொடிய பார்வையும் மன்மதக் கலையே ஓர் உருவெடுத்து வந்தார் போன்ற அல்குற் பாகத்தையும் உடைய அந்தப் பெண் அவள் மார்பிலே வில்லின் உருவமாக எழுதப்பட்டிருந்த தொய்யில் அழியும்படி தன் கணவனை இறுகத் தழுவுகிறாள். அவளுக்கு ஓர் ஐயம் தோன்றிற்று. அவள் தனது தனங்கள் அழுந்தி எங்கே தன் கணவனுடைய மார்பை உருவிப் பின்புறப் போயிற்றோ என்று முதுகைத் தடவிப் பார்க்கிறாள். பாலகாண்டம், வரைக் காட்சிப்படலம். செய்யுள் 315,

கொலைஉரு அமைந்தெனக்
கொடிய நாட்டத்து ஓர்
கலையுறு அல்குலாள்
கணவற் புல்குவாள்
சிலைஉறு அழிதரச்
செறிந்த மார்பில்தன்
முலை உருவின என
முதுகை நோக்கினாள்

கொடிய நாட்டத்து - கொடிய பார்வையையுடைய. கணவர் புல்குவாள் - கணவனைத் தழுவுவாள்.

இராமபிரான் இப்பூவுலகில் அவதரித்து அல்லலுறும் மக்களின் துயர்துடைத்ததைத் துலக்கிடும் மனிதகாவியமாகிய இக்காதையிலே கம்பர் காட்டும் காட்சியிது இன்னும் காட்டுகிறார், காண விழைவோம். இரவு தேய்ந்து இருள் நீங்குகிறது. இளங்கதிரோன் தல பொற்கதிர்களை வானத்திலே வீசி எழுகிறான். அந்த வெளிச்சத்தில் இரவெல்லாம் இன்பம் நுகர்ந்து மெய்மறந்து உறங்கிக்கொண்டிருக்கும் இரு இளங்காதலர்களையும் காட்டுகிறார். வட்டமாகிய ஒளி பொருந்திய முகத்தையுடைய ஒரு பெண்ணும், ஆடவனும் இரவு இன்பம் துய்த்த போது சேர்ந்து கிடக்கும்படி தழுவிக் கொண்டனர். விலகவில்லை. பொழுது விடிந்ததையும் அறியாமல் ஒட்டிய உடலைப் பிரிக்கவேண்டும் என்று உணராமலே உறங்கிக் கொண்டிருக்கின்றனர். பாலகாண்டம், வரை காட்சிப்படலம் செய்யுள் 318.

வட்டவாள் முகத்தொரு
மயிலும் மன்னனும்
கிட்டிய போதுடல்
கிடைக்கப் புல்லினர்;
விட்டிலர்; கங்குலின்
விடிவு கண்டிலர்
ஒட்டிய உடல் பிரிப்பு
உணர் கிலாமையால்

கங்குல்: இரவு.

கம்பர் தமது கடவுட் காதையைப் படித்து இன்புறுவோர்க்கு இவ்வுலகப் பற்றைப் பற்றி எடுத்துக் கூறும் மறை இது பொழுது விடிந்தது என்று அதோடு கூடிய இயற்கையழகை மட்டும் கூறிமுடித்திருந்தால் இக்காப்பியத்தில் சுவை இருக்காது என்று இத்தகைய காணத் தகாத காட்சிகளையும் புகுத்தி கம்பராமாயணப் பிரியர்களின் பாராட்டைப் பெறுகிறார் போலும். இன்னும் காண்போம்.

இராமபிரானுக்கு மிதிலையில் திருமணம் நடக்கப்போகிறது. தயரதர் பெண் கொள்ள மிதிலைக்குச் செல்கிறார். இராமபிரான் தந்தையை எதிர்கொண்டழைத்து வருகிறார். மேருமலை போன்ற வில்லினை முறித்து தங்கள் இளவரசியை மணக்கப்போகும் மாவீரனைக் காண வழியெல்லாம் மங்கையற்குழாம் திரண்டு நிற்கின்றது. மங்கையர் நினைவு வந்து விட்டால்தான் கம்பரின் கற்பனைக் காட்டாறாக மாறிவிடுமே! அந்தக் கூட்டத்தில் அவர் நமக்கு காட்டும் காட்சியினைக் காண்போம்.

இராமபிரானின் வருகையை எதிர்நோக்கி முன்னதாகவே பெண்கள் சாலையோரத்தில் நிற்கின்றனர். ஒரு பெண் காலம் கடந்து வருகிறாள். அதனால் அவளுக்கு இராமபிரானைக் காண வழி கிடைக்கவில்லை. ஏனென்றால் அவளுக்கு முன்னரே வந்து கூடி நிற்கும் பெண்களின் பெரிய கொங்கைகளும், ஆடையணியப் பெற்ற அல்குல் பகுதியும் நெருங்கி இராமனைக் கண்டுகளிக்கத் தடையாக மறைக்கின்றதாம். ஏமாற்றத்தினால் விம்முகிறாள். ஆசைப் பெருக்கினால் இரு பெண்களின் இடைக்கு இடையேயுள்ள இடைவெளியில் வள்ளலைக் கண்டு மகிழ்கிறாள்.

பாலகாண்டம்-உலாவியற்படலம்-செய்யும் 334.

கருங்குழற்பாரம் வார்கொள்
கனமுலை கலைசூழ் அல்குல்
நெருங்கின மறைப்ப ஆண்டோர்
நீக்கிடம் பெறுது விம்மும்
பெருந்தடக்கண்ணி காணும்
பேரெழில் ஆசை தூண்ட
மருங்குலின் வெளிகளூடே
வள்ளலை நோக்குகின்றாள்.

பாரம்-தொகுதி, மருங்குல்-இடை.

இராமனைக் காணும் ஆவலில் ஒரு பெண் இரு பெண்களின் இடைகளுக்கு இடையேயுள்ள இடைவெளியில் கண்டு இன்புறுகிறாள். மிதிலைப் பெண்களின் இடையழகை மிகைப்படக் கூறவேண்டிய கம்பர் அவர்களின் கச்சணிந்த பெரிய கொங்கைகளையும், ஆடை அணிந்துள்ள அல்குற் பகுதியையும் இச்செய்யுளில் புகுத்த வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது. கம்பர் தமது கடவுட் காதையிலே கவிச்சுவையை மட்டும் கலக்கவில்லை காமச்சுவையினையும் வேண்டுமென்றே புகுத்தியிருக்கிறார். உலகம் போற்றும் பெருங்காப்பியத்தை இயற்றப் புகுந்த கம்பர் தமது கற்பனைத் திறனைப் பெண்களின் மறைவிடங்களின் அழகை எடுத்துக்கூற பயன்படுத்தியிருப்பது பெருந்தன்மைக்குரியதா!

இராமாவதாரப் பெருங்காப்பியம் உலக இன்பங்களில் உழன்று கிடப்போரை உய்விக்க எழுதப்பட்ட நீதி நூல் எனப் போற்றப்படுகிறது. அதிலே எத்தகைய நீதி எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது, என்று விளக்கிக் கூறுவோர் நாத்திகர்கள் என இகழப்படுகின்றனர். இக்காதையினை மக்களுக்கு நல்வீடளிக்கும் புனித காதை எனக் கற்றோர் பலர் பறைசாற்றுகின்றனர். இதனை ஏற்கும் மக்களும் இதன்குறையினை உணர்ந்தாரில்லை. வடவர் ஆதிக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற கற்பனைக் கதை திராவிட மக்களின் மறைநூல் போல போற்றப்படுவதற்கு தகுதியுடைய நூலா? இந்த "இராமாயணம்" என்று சிந்திக்கவேண்டுகிறோம்.

—மன்னன்.

ராம்ராஜ் பனியன்கள்

★ உழைப்பு ★ எழில் ★ கவர்ச்சி
★ சிக்கனம்

இவை ஒருங்கே அமையப் பெற்றவை!
உயர்தர நூலால் உற்பத்தி செய்யப்பட்டவை!!

ராம்ராஜ் பனியன்கள்!!!

குறிப்பு :—
ராம்ராஜ் பனியன்களை மறுமுறை தைக்கவேண்டியதில்லை.
அவைகள் நூதன இயந்திரத்தால் உறுதியாகத் தைக்கப்பட்டவை.

ராம்ராஜ் நிட்டிங் பாக்டரி,
துளசிராவ் வீதி, : : திருப்பூர்.

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

13

முன்கதைச் சுருக்கம் :—

[சின்னப்ப பிள்ளை மகள் இந்திராவுக்கும் எழுத்தாளன் பாலனுக்கும் திருமணம் நடைபெற்றது.

இந்திரா, கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். பாலனின் தந்தை சொக்கப்ப பிள்ளையின் விருப்பப்படி எல்லோரும் மாப்பிள்ளை வீட்டிற்குப் புறப்பட்டனர். மணமக்கள் சொக்கப்பரின் காரில் வந்துகொண்டிருந்தார்கள். இந்திராவின் அண்ணன் சுந்தரமும் நண்பர்களும் முன்காரில் சென்று கொண்டிருந்தனர். அந்தக் காருக்கு முன்னால் ஒரு அழகு மங்கை விழுந்துகிடந்தாள், அப்பெண்ணை சொக்கப்பரின் வீட்டிற்குக் கொண்டு சென்றனர்.

பாலன், அம்பிகா எனும் அந்தப் பெண்ணை இரவு சந்தித்தான். அவளை வீட்டைவிட்டுப் போய்விடும்படி வேண்டினான். அவள் ஒரு கடிதத்தை வைத்துவிட்டுச் சென்றாள். இதை இந்திராவின் தங்கை கமலம் வெளியிலிருந்து கவனித்தாள். பாலன் வெளிச் சென்றபின் கடிதத்தை எடுத்துப் படித்தாள். அதற்குள் திரும்பிவந்த பாலன் அவளிடமிருந்து கடிதத்தைப் பறித்தான். அங்கிருந்து சென்ற அம்பிகா புதுக்கோட்டை சென்றாள். அதற்குள் கமலம் முதலியோர் புதுக்கோட்டைக்கு வந்துவிட்டனர். அம்பிகா கமலத்தின் வீடுசென்று எல்லோரையும் சந்தித்தாள். கமலத்துடன் பேசிக்கொண்டிருந்தாள். சுந்தரத்திடமும் பேசினாள். அதற்குள் மங்கையர்க்கரசி அம்பிகாவை 'வெளியே போ' என்று சொல்லி அனுப்பினாள். அவளும் வெளியே சுற்றினாள். சுந்தரமும் அவளைத் தேடி வெளியே சுற்றினான். இருவரும் சந்தித்தபோது போலீஸ் லாரி ஒன்று வந்தது. போலீஸ் அதிகாரி அவர்கள் இருவரையும் போலீஸ் லாரியில் ஏற்றி வந்தார், ஸ்டேஷனில் சப்இன்ஸ்பெக்டர் அவர்களை விசாரித்து அன்று இரவே அவர்களை இரண்டு போலீசாருடன் சென்னைக்கு அனுப்பினார் ரயிலில் சென்றுகொண்டிருந்தபோது, சுந்தரம், அம்பிகாவிடம் அவளது வாழ்க்கை வரலாற்றைக் கேட்டான் அவள் தன் தாயாரைப் பற்றியும், தாயார் அவளைப் படமுதலாளிக்குப் பலியிட முற்பட்டதையும், விபரமாகச் சொல்லுகிறாள்.

போலீசார் பாதுகாப்புடன் எழும்பூர் வந்திறங்கிய அம்பிகாவும் சுந்தரமும் பாலன் கைதுசெய்யப்படுவதைக் கண்டு திகைத்தனர் எதுவும் பேசவிடவில்லை! அம்பிகாவும் பாலனும் ஒரு வழியாகவும் பாலன் மட்டிலும் வேறு வழியாகவும் போலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்

போலீஸ் ஸ்டேஷனில் சுந்தரம் பாலன் என்று தவருகக் கருதப்பட்டுக் கைது செய்யப்பட்டதால் சுந்தரம் விடுதலை செய்யப்பட்டான். பாலனைச் சிறையில் தள்ளினார்கள். அம்பிகா அவளது தாயாரோடு கட்டாயப்படுத்தி அனுப்பிவைக்கப்பட்டாள்.

இந்திராவிற்கு உடல்நலம் சரியில்லை என்ற சேதி கேட்டு சுந்தரம் மேலைச்சிவபுரிக்குச் சென்றான். சுந்தரத்தைப் பற்றிய சேதியறிய அம்பிகா சிறைச்சாலை சென்று பாலனிடம் உரையாடினாள், பாலன் எதுவும் சரியாகக் கூறவில்லை. அம்பிகா பாலனை மீட்பதற்காக வக்கீல் தண்டபாணியிடம் ஆலோசனை செய்தாள். இந்திராவையும் சுந்தரத்தையும் காண விரும்பியதால் அம்பிகா மேலைச்சிவபுரிக்குச் சென்றாள். இந்திரா இறந்துவிட்டாள் என அறிந்தவளாக யாரையும் பார்க்காமலேயே வனஜா, கிரிஜா என்ற இரு நாட்டியக்காரிகளின் காரில் சென்னைக்குப் பயணமானாள். சென்னை வந்து சேர்ந்ததும் பாலனை ஜாமீனில் விடுதலை பெறச் செய்தாள். விடுதலையான பாலன் அம்பிகாவிடம் விடைபெற்றுக்கொண்டு மேலைச்சிவபுரிக்குப் பயணமானான்.

மேலைச்சிவபுரி சென்றதும் இந்திரா இறக்கவில்லை! இறந்தது தாயார் என்பதையறிந்து பாலன் ஒருபுறம் மகிழ்ச்சியும் ஒருபுறம் வேதனையும் கொண்டான். ஒருவாறு மனத்தை தேற்றிக்கொண்டு இந்திரா, கமலம் உடன்வர சினிமா தியேட்டருக்குச் சென்றான்]

★

"என்ன தவறு செய்துவிட்டோம்! கமலத்தை ஏன் அழைத்து வந்தோம்?"-என்று எண்ணித் துடித்தாள் இந்திரா. கமலமோ எண்சாணும் ஒருச்சாணாய்க் குறுகி உட்கார்ந்திருந்தாள். அசம்பாவிதமான இந்தச் சந்தர்ப்பத்தை அவள் எதிர்பார்த்தவளல்ல. தான் விரும்பாத ஒன்றையே காரணமாகக் கொண்டு மேலும் தன்னை வெறுப்பாளே இந்திரா என்று அவள் நெஞ்சம் துடியாய்த் துடித்தது. படத்திலே கதா நாயகனும் கதா நாயகியும் உல்லாசமாகப் பேசுகிற கட்டம் நடந்தது. இந்திராவின் பார்வை அதிலே வெறுப்போடு விழுந்தது. படத்திலே ஒரு உற்சாகமான கட்டம் வந்தபோதுபாலன் சிரித்தபடியே பக்கத்திலிருந்த கமலத்தின் தோளில் தட்டி, திரும்பி அவளைப் பார்த்தான். திடுக்கிட்டான்- துள்ளிக் குதித்தான். எழுந்து போய் இந்திராவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். ஆம்; அந்தத் தவறு அவன் விரும்பிச் செய்ததல்ல. இருளிலே ஏற்பட்ட தடுமாற்றம். மெதுவாக இந்திராவைப் பார்த்தான். அவளோ, மேனி கொதித்து வியர்வைவெள்ளத்தில் உட்கார்ந்திருந்தாள். அவளையறியாமலே கண்ணீர் பொல பொலவென்று வழிந்து கொண்டிருந்தது. சேலைத் தலைப்பால் மூக்கைச் சிந்தினாள். அதைக் கவனித்த கமலம் தழுதழுத்த குரலில் 'அக்கா' என்றாள். 'பளிச்' சென்று அவள் கன்னத்தில் அறைந்த இந்திரா 'பேசாமல் கிட சனியனே' என்றபோது கமலத்தின் உயிர் நின்று மீண்டது. பாலன் இதைப் பார்த்து மெதுவாக இந்திராவோடு ஒட்டி உட்கார்ந்து கொண்டு அவள் காதோடு காதாக "தெரியாமல் நடந்து போச்சு இந்திரா. உன்மேலே ஆணையாச் சொல்றேன். வேணும்னுபோய் உட்காரல்லெ. என்னை நம்பு" என்றான். இந்திரா பதில் சொல்லவில்லை.

"இன்னும் நீ சந்தேகப்பட்டால் நான் செத்துத்தான் என் புனிதத் தன்மையை நிரூபிக்க முடியும்" என்று கலங்கியபடி மேலும் பேசிய பாலனை நிமிர்ந்து பார்த்த இந்திரா அவன் கைகளை எடுத்துக் கண்களில் ஒத்திக்கொண்டாள். மனதுக்கு மீண்டும் ஒரு அமைதியைத் தேடிக் கொண்டான்.

முதல் வகுப்பில் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. ஆகவே திரையில் ஒரு படமும், முதல் வகுப்பில் ஒரு நாடகமும் நடந்து முடிந்தன. பிறகு மூவரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

9

ஆள் மாறு படலம்

நாடகமே உலகம் - நாளை
நடப்பதை யாரறிவார் ?

—படப்பாட்டு

அம்பிகா திமிறினாள். கத்த முயன்றாள். முடியவில்லை. அந்த முரடன் அவளை அழுத்தமாகப் பிடித்திருந்தான். "என்னைச் சிறைக் கனுப்பிவிட்டு ஆட்டம் போடுகிறாயா, ஆட்டம்? உன் அழகைக் கெடுத்து அலங்கோலமாக்குகிறேன் பார்!" என்று கூறிக்கொண்டே அவளது முந்தானையாலேயே அவளது கைகளைக் கட்டினான். கட்டிவிட்டு, பையிலிருந்து ஒரு நெருப்புப் பெட்டியை எடுத்து ஏற்றினான். அந்த ஒளியில் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். திடுக்கிட்டான். போய் 'சுவிட்சை'ப் போட்டான். தீராத குழப்பம் அவனை ஆட்கொண்டது. "சத்தம் போடாமல் நீ யார் என்று சொல்! சத்தம் போட்டால் கொன்றுவிடுவேன்" என்று கூறிக்கொண்டே, அவள் வாயிலிருந்த துணியை எடுத்தான். அம்பிகா, பயந்து நடுங்கியபடி "என் பெயர் அம்பிகா, இங்கே விருந்தாளியாகத் தங்கியிருக்கிறேன்" என்றாள். "வனஜா எங்கே?" என்று கேட்டான் அவன். பக்கத்து அறையைக் கையைக் காட்டினாள் அம்பிகா. மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு பக்கத்து அறைக்குப் போனான் அவன். எதிர்பாராத விதமாக 'திருடன் - திருடன்' என்று கூச்சல் போட்டாள் அம்பிகா. உடனே பளிச்சென்று அவன் வேகமாக ஓடி ஜன்னல் வழியே குதித்துப் பறந்தான். விளக்குகள் ஏற்றப்பட்டன. வேலைக்காரர்கள் ஓடிவந்தார்கள். வனஜாவும் கிரிஜாவும் பதறி அடித்துக் கொண்டு வந்தார்கள். அம்பிகா தன்னை சமாளித்துக் கொண்டு நடந்த விபரங்களைச் சொன்னாள். "வனஜா எங்கே என்று கேட்டான் அவன்" என்று கூறும்போது வனஜாவின் முகம் கறுத்தது. மென்று விழுங்கியபடி "அவன் முகத்தை நன்றாக கவனித்தாயா? நாம் ஜெயிலுக்குப் போயிருந்தபோது ஓடிவந்து கலகம் செய்தானே ஒரு கைதி, அவன் மாதிரி இருந்ததா?" என்று கேட்டாள் வனஜா. அம்பிகாவுக்கு இப்போதுதான் பிடிபட்டது. "ஆம் அவனேதான் அவனேதான்" என்று கத்தினாள். பிறகு இரவு முழுவதும் வனஜா தூங்கவே இல்லை. கிரிஜாவும் பதறிப் போனாள்.

மறுநாள் வனஜாவின் வீட்டுக்கு ஒரு கூர்க்காக்காரன் காவலனாகக் கொண்டு வரப்பட்டான். வெளியிலே போகும் போதுகூட அவனையும் கூட்டிக் கொண்டே போவது என்று தீர்மானித்தாள் வனஜா. அம்பிகா ஒரு பெரிய புதிருக்குள் சிக்கிக் கொண்டிருந்தாள். ஜெயிலில் சந்தித்த கைதிக்கும் வனஜாவுக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டும்-என்கிற வரைக்குந்தான் கணக்குப்போட அவளால் முடிந்தது. அதுஎன்ன தொடர்பு

என்பதுதான் பதில் காண முடியாத புதிராக இருந்தது. சரி நமக்கென்ன?-என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள் அம்பிகா.

இரண்டு நாட்கள் நகர்ந்தன.

அன்றைக்கு மத்தியானம் வனஜா, கிஜைா, அம்பிகா மூவரும் கியாரம் போர்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். காவல்காரன் ஓடி வந்து, "ஒரு பெரிய மனிதர் காரில் வந்திருக்கிருர்; கருப்புக் கண்ணுடி போட்டிருக்கிருர்; அரைகுறைத் தமிழில் பேசுகிருர்; வட நாட்டுக்காரராம்! உங்களைப் பார்க்க வேண்டுமாம், பட விஷயமாக!"-என்ருன். உடனே வனஜா எழுந்து அவரை உட்காரச் சொல் என்று கூறிவிட்டு உள்ளே போய் ஆடம்பரமாகத் தன்னைச் சிங்காரித்துக் கொண்டு திரும்பி வந்தாள்.. முன் பகுதியில் அந்த வடநாட்டுக்காரர் அமர்ந்திருந்தார். வனஜா அவரை வணங்கியபடி உள்ளே வந்து எதிரே அமர்ந்தாள். தான் ஒரு படம் எடுக்கப் போவதாகவும் அது ஒரு நாட்டியக்காரியின் கதை என்றும் அதற்கு வனஜாவைத் தான் கதாநாயகியாகப் போடுவதெனத்தான் தீர்மானித்துவிடடதாகவும்அவர்கூறினுர். வனஜா, மகிழ்ச்சியினுல் பேச முடியாதபடி உட்கார்ந்திருந்தாள். "ரேட் விஷயமெல்லாம் என்ன?"என்று இழுத்தார் வட நாட்டுக்காரர். "நீங்களேசொல்லுங்கள்"என்று பொறுப்பை அவர் கையில் ஒப்படைத்தாள் வனஜா.

"மூன்று வருஷ எக்ரிமெண்ட். மாசம் மூவாயிரம் ரூபாய் சம்பளம்"என்று ஒரு போடு போட்டார் அந்த வட நாட்டுக்காரர்.

"மறுக்கவா போகிறேன்!" என்ருள் வனஜா.

அவள் மனம் ஆனந்தக் கூத்தாடியது. அவர் ஆயிரம் ரூபாய்களை அவள் கையில் வைத்து "சாயந்தரம் வருகிறேன். எக்ரிமெண்ட் செய்து கொள்ளலாம்" என்று கூறிவிட்டு எழுந்தார். வனஜாவுக்கு அவரை மிகவும் பிடித்திருந்தது. "இரவு இங்கேயே சாப்பிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள். அவர் சிரித்துக் கொண்டே, "வருகிறேன், நான் மாமிசம் சாப்பிடமாட்டேன். பூரி, சப்பாத்திமட்டும் செய்யுங்கள்"-என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவர் கண்ணுக்கு மறைந்ததும், ஒரே தாவில் உள்ளே ஓடி வந்தாள் வனஜா. அம்பிகாவும் கிஜைாவும் மும்முரமாகக் காரம் ஆடிக்கொண்டிருந்தார்கள். அவர்களை ஆடவிடாமல் காய்களைக் கலைத்தபடி தன் ஆனந்தத்தை வெளிப்படுத்திக் கொண்டாள் வனஜா. ஆயிரம் ரூபாய்களையும் அவர்களுக்குக் காட்டி, "மூன்று வருஷ எக்ரிமெண்ட். மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளம். நான் ஹீரோயின்" என்று அடுக்கிஞள். கிஜைா கைதட்டி அதை வரவேற்ருள். அம்பிகாவின் முகமும் மலர்ந்தது. அதோடு சிறு ஆசையும் அவள் மனத்தில் எழுந்தது. "நாமும் நடிக்க ஆரம்பித்தால் என்ன?"-சகவாச தோஷம் என்பார்களே, அது இப்படித்தான் துவங்கும். குடும்பமாக வாழ வேண்டும் என்னும் ஆசை குறைந்து நடிக்கும் ஆசை தலை தூக்கியது அவளிடம். அதை மெதுவாக வனஜாவிடம் சொல்லியும் வைத்தாள். "எனக்கும் ஏதாவது சந்தர்ப்பம் இருந்தால் சொல்லேன்" என்ருள்.

"ஓ, எஸ்! இனி நாம் மூன்று பேருமே சகோதரிகள். நாட்டியம், நாடகம், சினிமா எல்லாவற்றிலும் சேர்ந்தே தொழில் புரிவோம்" என்ருள் வனஜா.

"இந்தத் தொழிலுக்கு வந்தால் ஒரு மாதிரியாகத்தான் போக வேண்டிய திருக்கும்" என்று ஒரு புதிய சங்கதியைத் தொடங்கிஞள் கிஜைா. அம்பிகா அதைப் புரிந்துகொள்ளாமவில்லை. அரை குறையாகத் தலையை ஆட்டிஞள். அவள் மனது இப்போது பின்வாங்க ஆரம்பித்தது. கடைசியில் முடிவான ஒரு எண்ணம் பிறந்தது. பாலன் விரும்பிஞல் மணமுடித்துக்கொண்டு அவனேடு வாழ்ந்து விடுவது. இல்லையேல் வேறு யாருக்கும் வாழ்க்கைப் படுவது இல்லை. இதுதான் அவள் செய்துகொண்ட முடிவு.

அன்று மாலை, மாலைத் தபாவில் அம்பிகாவின் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அதைப் பிரித்துப் படித்த அம்பிகா வேதனை கலந்த ஒரு ஆச்சரியத்தில் விழுந்தாள். அந்தக் கடிதம் பாலன் எழுதியது. சுருக்கமான அந்தக் கடிதம் இதுதான்.

அம்பிகாவுக்கு.

நலம். உன்னை நான் என்னவோ என்று எண்ணிக்கோண்டிருந்தேன், ஆனுல் நீ, உன் வாழ்வுக்காக எதையும் துணிந்து செய்துவிடுவாய் - சோல்லிவிடுவாய் என்பதை இப்போதுதான் தேரிந்துகோண்டேன். நீ விரும்பியதுபோல் இந்திரா சாகவில்லை. என் கண்மணி இதோ இந்த நேரத்தில் என் மடியிலேதான் இருக்கிருள். இனி நான் உன் முகத்தைப் பார்க்கக்கூட விரும்பவில்லை, என் தாய் இறந்துவிட்டாள். இனி இந்திரா என் தாயாகவும் இருந்து என்னைக் காப்பாற்றுவாள்.

இங்ஙனம்,

பாலன்.

கடிதத்தைப் படித்து முடித்த அம்பிகா அலட்சியமாகச் சிரித்தாள். இறந்தது யார் என்கிற உண்மையும் அவளுக்கு விளங்கிவிட்டது. தன்னை வெறுக்கும் பாலனை இனி ஏன்தான் விரும்ப வேண்டும் என்று ஒரே அடியாக வெறுக்கத் தொடங்கிஞள். உலகத்திலேயே மேகத்தைக் காட்டிலும் வேகமானது பெண்கள் செய்து கொள்ளும் முடிவுதான். தான் சினிமாவில் நடிப்பதென்ற தீர்மானத்திற்கே வந்துவிட்டாள் அம்பிகா. அப்பொழுது வந்த தினசரி பத்திரிகை ஒன்றை கையிலேந்தியபடியே வனஜா அங்கே வந்தாள். சிறையிலிருந்து ஒரு கைதி தப்பி ஓடியதாக ஒரு செய்தி அதிலே பிரசுரிக்கப்பட்டிருந்தது. பெயர் சங்கரன் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதிலிருந்து வனஜாவின் சந்தேகம் தெளிந்துவிட்டது. தான் ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தாள். இந்தப் பட முதலாளியைக் கைக்குள் போட்டுக்கொண்டு விட்டால் கவலையே இராது - என்று நினைத்தாள். அன்றே அந்தத் திட்டத்தை நிறைவேற்றி விடுவது என்றும் தீர்மானித்தாள்.

இரவு சுமார் ஏழு மணிக்கு பட முதலாளி வந்து சேர்ந்தார். அவரை மாடிக்குக் கூட்டிக் கொண்டு போய் தன் அறையில் உட்கார வைத்துவிட்டு கீழே போய்க் காப்பி கொண்டு வந்தாள் வனஜா. காப்பியை வாங்கி மேஜையில் வைத்த முதலாளி எதிரே கிடந்த சினிமா பத்திரிகையைக் காட்டி 'அதை எடு' என்ருர். வனஜா அதை எடுத்து அவர் முன் நீட்டிஞள். பத்திரிகையை வாங்காமல் அவள் கையைப்பிடித்தார் அவர். வனஜா வெட்கங் கொண்டவள் போலவும் விரும்பாதவள் போலவும் சிணுங்கிஞள். முதலாளி அதை லட்சியம் செய்யாமல் அவளை இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். அப்போதும் திமிறிஞள் வனஜா. ஆயினும் சிறிது நேரத்தில் கருப்புக் கொடியை இறக்கிவிட்டு வெள்ளைக் கொடி காட்டி அவர் விருப்பத்திற்கு இணங்கிஞள் வனஜா.

மிகவும் உற்சாகமடைந்த நிலையில் முதலாளி தன்னை அறியாமல், "உன் கழுத்திலிருந்த மச்சம் எங்கே?" என்று கேட்டார்.

வனஜா சிரித்தபடி, "என் கழுத்தில் மச்சம் இருந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

முதலாளி திடுக்கிட்டார். அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். சமாளிக்க முயன்ருர். அவர் கண்களிலிருந்த கண்ணுடி கழன்று விழுந்தது. வனஜா திகைத்தாள்.

தொடரும்

Tel : " Newhosiery " Phone : 208

N. H. M.

P. B. No. 37 -: :- TIRUPUR.

எழுத்தாளன் காதலி...

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

லிடியாவின் இல்லற வாழ்வில் இருள் விழுந்தது. மைக்கேல் இந்த 'அரை குறை' கதைகளில் மனதை இழந்துவிட்டிருந்தான். செக்காவின் உணர்ச்சிமயமான கடிதங்களில் பேதை லிடியா ஆறுதலைக் கண்டாள்!

ஸெர்ஜியின் மாளிகையில் அந்த 'கொடுத்து வைக்காதவர்கள்' திரும்பவும் சந்தித்தார்கள். லிடியாவிடம் தாய்மையின் பூரிப்பு இருந்தது. செக்காவின் விழிகளில் எப்போதும் போல விரக்தியும் வேதனையும் ததும்பியிருந்தன. லிடியாவின் குழந்தைகளைப்பற்றி செக்காவ் அன்று நிறைய பேசினான்.

"குழந்தைகள்! வாழ்வின் பயங்கரத்தை தொடாத தளிர்கள்! லிடியா, உனக்கென்று ஒரு குடும்பம் இருப்பது எத்தனை ஆறுதலாயிருக்கிறது தெரியுமா?" அவன் மன நிறைவோடு பேசினான்.

எவனுக்கோ வாழ்வைகாணிக்கையாக்கிவிட்ட ஒரு பேதை - இழந்த சொர்க்கத்திற்காக வேதனையிலே உழலும் ஏமாந்தவன், இந்த இருவரும் வாழ்க்கையின் சூதாட்டத்திலே வெட்டுக்காய்களாகப் புரண்டார்கள்!

நீலக் கடலின் அலைச்சுருள்களில், நிலவின் களங்கத் தேகத்தில், மலை முகடுகளின் பனித்திரை விரிப்பில், எங்கெல்லாமோ அவர்களது விழிகளுக்கு எட்டாத வாழ்வின்பம் ஒளிந்திருந்தது.

கடிகாரச் சங்கிலியில் அலங்காரமாக அணிந்து கொள்ளும் பதக்கத்தை லிடியா செக்காவிற்குப் புது வசந்தம் பிறந்ததும் பரிசாக அளித்தாள். பதக்கத்தில் **செக்காவின் சிறுகதைகள் பக்கம் 267, 6. 7, வரிகள்** என்று சின்னஞ் சிறு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. தனது கதைத் தொகுதியைப் புரட்டியிருந்தால், '**என் வாழ்க்கை தங்களுக்கு எப்போதாவது தேவைப்பட்டால் வந்து எடுத்துக் கொள்ளுங்கள்.**' லிடியா குறிப்பிட்டிருக்கும் இந்த வரிகளை செக்காவ் படித்திருப்பான். அவனது 'கடற்பருந்து' நாடகத்தில் காதலி பதக்கத்தைக் காணிக்கையாக்கும் காட்சி வருகிறது. நாடகத்தில் லிடியா நீனு எனும் பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தாள்.

1897-ம் ஆண்டில் இருமல் வியாதியின் கொடுமையில் செக்காவ் உழன்ருன்! ஏமாற்றங்களால் நிரம்பிப்போன அந்த இதயத்தை க்ஷயரோகப் புழுக்கள் அரித்திருந்தன. டாக்டரான செக்காவிற்கு தனது வாழ்வின் எல்லைக் கோடுகள் சுருங்குவதை உணர முடிந்தது. மாஸ்கோ மருத்துவ மனையில் செக்காவ் இருந்தபோது, அங்கே லிடியா வந்திருந்தாள். இரத்தமாக வாந்தியெடுத்த பிறகும்கூட அவளிடம் செக்காவ் புன்சிரிப்போடு பேசிக்கொண்டிருந்தான். லிடியாசெக்காவிற்கு விருப்பமான லில்லி மலர்களைப் பரிசாகஅளித்துவிட்டு, பீட்டர்ஸ்பர்க் சென்ருள்.

வியாதியின் கொடுமை தணிந்ததும் கிரிமியாவிற்கு பயணமான செக்காவ் 1899-ல் திரும்பவும் மாஸ்கோ வந்தான். மே மாதம் முதல் தேதி மாஸ்கோ வழி குழந்தைகளோடுகிராமத்திற்குச் செல்வதாக லிடியா கடிதம் எழுதியிருந்தாள். புகை வண்டி நிலையத்தில் செக்காவ் அவளுக்காகக் காத்திருந்தான்.

டால்ஸ்டாய், துர்கனீவ், டோஸ்டாவஸ்கி போன்ற எழுத்தாளர்களின் சித்திரக் காகிதங்களில் சுற்றப்பட்டிருந்த 'சாக்லேட்' குவியலை செக்காவ்வைத்திருந்தான்.

லிடியாவின் குழந்தைகளை செக்காவின் இனிமையான பண்பு விரைவிலேயே கவர்ந்தது. லிடியாவின் கடைசி குழந்தை நீனுவை செக்காவ் வாரியணைத்துக் கொண்டான். அவனது தோளிலே சின்னஞ் சிறு முகம் சாய்த்து நீனு சிரித்தாள். லிடியாவின் உணர்ச்சிகள் பூரிப்பில் நிரம்பி வழிந்தன.

"பத்து வருடங்களுக்கு முன் நாம் முதல் முதலாக சந்தித்துக் கொண்டோம். அப்போது நமக்கு இளமைக் காலம்..." செக்காவின் புன்னகைத்த பேச்சில் ஏனே அடங்காத சோகம் நிழலிட்டது. அவனது குரலின் ஆசைப் பிரவாகத்திலே லிடியா திளைத்திருந்தாள்.

வண்டி புறப்படப் போகும் மணி ஒலித்தது.

குழந்தைகளோடு லிடியா வண்டியில் அமர்ந்தாள். செக்காவ் விடைபெற்றுக்கொண்டான். இரைச்சலிட்டபடி வண்டி நகர்ந்தது. விரைந்து செல்லும் வண்டியிலிருந்தபடி லிடியா வெளியே பார்த்தாள். திரும்பிக் கூடப் பார்க்காமல் செக்காவ் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

குழந்தைகளோடு லிடியா கிராம விடுதிக்கு வந்தாள். லில்லிப் பூக்கள் கமழ்ந்த குளிர்மையான இரவு அது. வானத்திலே ஒட்டிக்கிடந்த தேய்பிறையை லிடியா தாபம் நிரம்பிய இதயத்தோடு பார்த்தாள். அன்று இரவு முழுதும் அவள் விழி மூடவில்லை. வானத்தில் தாரகைப் புள்ளிகள் மின்னித் திளைத்தன. வண்டி நகர்ந்தபோது திரும்பிப் பார்க்காமல் நடந்து மறைந்த செக்காவின் சோகமயமான உருவம் லிடியாவின் உள்ளத்திலே தேயாமல் பதிந்திருந்தது. அது தான் கடைசிச் சந்திப்பு என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது.

ஆசை வெள்ளத்தில் பிறந்த அந்த அழகிய நீர்க்குமிழி இறுதியில் **உடைந்தே போயிற்று!**

ஜானகி...

— 11-ம் பக்கத் தொடர்ச்சி —

உள்ளப் போராட்டத்திற்கு, எண்ணக் குழப்பங்களுக்கு அவனுல் முடிவு காண முடியவில்லை; அவனது அமைதியான உள்ளம் அலைகடல்போல கொந்தளித்தது: எரிமலைபோல குமுறியது. தனது சீதையால் ஏற்பட்ட இந்த இழிவைப் போக்கிக்கொள்ள வேண்டுமானுல் நிறை கர்ப்பிணியாகிய இவளை ஒரு சிறிதும் கருணை காட்டாமல் கானகத்திற்கனுப்ப வேண்டியதுதான் என்று தனக்குள் முடிவுசெய்து அதன்படியே இலக்குவனை அழைத்து சீதையைக் கொண்டுபோய் கொடிய விலங்குகள் திரியும்படியான காட்டிலே விட்டுவா என்று அவனுக்கு ஆணையிட்டான். இறுதியில் நிலம் வெடித்து சீதையை தனக்குள் எற்றுக்கொண்டது. அனுதையாகத் தோன்றிய சீதை அனுதையாக இறந்தாள்.

ஜானகி கற்பிழந்தவள் தானு என்று இராமன் திடமாக ஐயப்பட்டான். அவளுடைய வாழ்வின் தொடக்கத்திலிருந்து இதுவரையில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் யாவற்றையும் ஆழ்ந்து எண்ணிப் பார்த்து சீதை கற்பிழந்தவளே என்ற முடிவுக்கு வந்தான். இவனுடைய எளிய மனதையும், இழிவான வாழ்வையும் கண்டு ஊர் சிரித்தது; நகரமாந்தர் நையாண்டி செய்தனர். மானங்காக்க மனைவியைப் பிரித்தான். இதுதான் ஜானகி வாழ்ந்த வாழ்வும் மறைந்த மறைவுமாகும்.

கம்பநாடனுல், கற்புக் கனி என போற்றப்படுகின்ற சீதை என்ன காரணத்தாலோ கட்டிய கணவனும் இராமனுல் கற்பிழந்தவள் என்று பழி சுமத்தப்பட்டாள். கற்புக்கு உதாரணமாக்க காந்தி யாருக்குத் தோற்றமளிக்கும் சீதா பிராட்டியார் என்ன எதுவாலோ இராமன் மனதிற்கு கற்புடை மனைவியாகத் தோற்றமளிக்கவில்லை.

சீதையின் வாழ்விலே இடம் பெற்றுள்ள இத்தகைய நிகழ்ச்சிகளை வால்மீகி இராமாயணம், அற்புத இராமாயணம் போன்ற பல இராமாயணங்களில் காணும்போது நமக்கும் சீதையின் கற்பைப் பற்றி இராமனைப்போல் ஐயம் உண்டாகிறது. சீதை கற்பிழந்தவளா என்ற வினு பிறக்கிறது இந்த வினுவிற்குப் பொதுமக்கள் விடை அளிப்பார்களாக!

"யாழ்" மார்க் லேபிள்களை பார்த்து வாங்குங்கள்.

உயர்தர

பெட்சீட்டுகளும்

பலரக

லினன் வேஷ்டி

சர்ட்டிங்குகளும்

உற்பத்தியாளர்கள் :—

இளங்கோ டெக்ஸ்டைல்ஸ்

த. பெ. எண் : 2,

குமாரபாளையம், (வழி) ஈரோடு.

ELANGO TEXTILES,

Post Box No. 2,

Komarapalayam, (via) Erode

Bed Sheets & Linen Dhoties, Shirtings Producers.

எங்கள் சிலோன் ஸ்டாக்கிஸ்ட்கள் :

S. S. மாரி செட்டியார்,

ஜவுளி இறக்குமதியாளர்கள்

238, K. K. S. Road, யாழ்ப்பாணம்.

வெண்பாப் போட்டி

22. அண்ணாவிற்கும் ஏதேனும் ஒரு பொருளுக்கும் சிலேடை.

வெண்பாப் போட்டி 22-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், பிரசுரத்திற்குத் தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியிடப்படும்.

★ மெய்ப்புகழும் செய்தொண்டும் மேதினியோர்க் கென்னாளும்
பொய்த்திடா நற்புலவர் பல்லோரும்-மொய்த்திட
கொய்த நறுங்கனிபோல் கொள்கை மணம்பரப்பும்
தூய்தமிழும் அண்ணாவும் நேர்!

—அ. க. காளியண்ணன், அய்யம்பாளையம்.

★

விண்ணோங்கி வாழ்ந்த வீரத் தமிழ்மகனின்
கண்ணா யிருந்த கலைகளுடன்-பெண்ணேநல்
எண்ணக் குவியல் இலங்குகிற நூல்நிலையம்
அண்ணா அகமென் றறி!

—ந. செல்லப்பன், திருச்சி.

★

நித்தம் படித்தலால் நீதிநெறி யூட்டுதலால்
வித்தகர்கள் யாரும் விரும்புதலால்-புத்துலகம்
கண்ணு திருவிடத்தின் நல்லாட்சி கோருதலால்
அண்ணாவும் காளிதழும் ஆம்!

—பெ. இராமையா, சாலிச்சந்தை

★

அஞ்சாமை யாலெஞ்சும் ஆண்மையதால் ஆற்றலதால்
நெஞ்சாலும் மாற்றம் நினையாத-வஞ்சகமில்
நற்றலைமை மாட்சியதால் நாம்விரும்பு மண்ணாவைப்
பொற்புடையாண் சிங்கமெனப் போற்று.

—பனை. சண்முகம், நெற்குப்பை.

★

குள்ள உருவால் குளிர்தரும் பண்புரைகள்
அள்ளித் தமிழில் அளிப்பதால்-மெள்ளநமைத்
தன்பால் இழுக்கும் தகையால் குறளுக்கு
என் அண்ணா ஒப்பாம் இசை.

—செல்வதாசன், சென்னை.

★

சொல்லுக்குச் சொல்லினிக்கும் சொல்லிய சொல்லனைத்தும்
ஒல்லுவகை யேநவிலும், உட்படுத்தும்-நல்லதாமோர்
தென்னரசு கேட்டுநிற்கும்; திக்கெட்டும் சீர்மணக்கும்
அண்ணாவை நற்றமிழென் றோது.

—ம. நீலன், வாங்கல்.

★

ஓரிடத்தும் தங்கான் ஒளிக்கதிரை வீசிடுவான்
சேரிடத்தில் மூடுபனி செத்தொழியும்-ஆரிடத்தும்
தண்ணீர்மை கொண்டெமக்குச் சொல்மாரி தந்திடுவான்
அண்ணாவும் ஆதவனும் கொள்.

—வே. அர. சைலவாசன், வேலூர்.

★

மாமணியாம் தீஞ்சுவையாம் மக்கள் நிலத்தரசாம்
தேமொழியார் பொன்னூற்றல் தெள்ளமுதாம்-பூமதுவாம்
உண்ண உயிர்மருந்தாம் ஊரிலொரு போர்க்களமாம்
அண்ணாவே செந்நெல் உலகு!

—க. ராமசாமி, பொறையூர்.

★

உலகத் திருள்கடியும் ஒள்ளொளி செய்யும்
தொலையாத் துயிலுணர்த்தித் தூய-மலர்ச்சிதரும்
எந்நாளும் வாழ்வில் இதயத்தே வீற்றிருக்கும்
அண்ணாவும் செஞ்சுடரும் ஆம்.

—வே. ச. ஞானப்பிரகாசன், வேகாமங்கலம்.

சங்க வளமுடைத்தாய் சான்றும் பொருளுடைத்தாய்
எங்கணும் தன்னுண்மை யேற்றலால்-மங்காத
தண்ணீர்மை நாங்கலால் சான்று மதியுதிப்பால்
அண்ணாத் துரைக்குழுக்நீ ராம்.

—மா. இராஜன், வாதலக்கரை.

★

ஆய்ந்தசொற் காணலால் ஆன்றோர் விரும்பலால்
தேய்மதியோ ரைஇலரமற் செய்தலால்-வேய்தோளோய்!
வண்டமிழின் நல்லேடும் மாண்புயர்ந்த பேரறிஞன்
அண்ணாவும் நேரென் றறை!

—செந்தமிழரசன், பண்ணைக்காடு.

★

நடையழகில் சொல்நயத்தில் நல்லணியில் நோக்கில்
படைவெல்லும் பான்மையில் என்றும்-தடையிலையே,
தென்னாடு கொண்டாடக் காளையர் போற்றுகின்ற
அண்ணாவே பெண்ணென்று கூறு.

—தமிழ்ச்சித்தன், சென்னை-17.

★

சின்ன வடிவமுடன் சீரியநற் றூய்மையும்
பொன்னித் தமிழ்நாட்டில் தோற்றமும்-கன்னியே
மண்ணில் துயர்களைவும் கொண்டோர் பொடியுடைய
அண்ணாவும் மல்லிகையும் தான்.

—அ. சந்தானகோபாலன், தஞ்சை.

★

தோற்றத் தெளிமை, குறுமை, தொடர்ந்தூறும்
ஊற்றனைய ஆழ்கருத்து; உள்ளநேர்த்தி-மாற்றுரும்
ஒப்பிடும் நல்லுவமை; ஓங்குபுகழ்; கொண்டுகுறள்
ஒப்பிடும் அண்ணாவை ஓர்.

—மு. இளமாறன், மதுரை.

★

அன்போடு நல்வீரம் ஆளும் திறனறிவு
பண்போடு கொண்டதனால் பைந்தமிழர்-கண்போல
என்றென்றுங் கொண்டேநாம் இன்படைவோம் பாரதனில்
அண்ணாதான் நற்குறளென் றாய்ந்து.

—இராம. மாணிக்கம், நெற்குப்பை.

★

அன்பு மொழிபகர்ந்து ஆதரவு காட்டுதலால்
துன்பஞ்செய் வேதநெறி நீக்குதலால்-முன்னோராம்
தண்டமிழர் சீர்த்தியினைத் தாரணிக்கே ஓதுதலால்
அண்ணாநம் முப்பாலுக் கொப்பு.

—எருவை. நக்கீரன்.

★

உள்ளத் துணிவோ டுறுதிகொண்ட நெஞ்சத்தான்
அள்ளக் குறையா தவன்மூட்டை-வின்னரிதாம்
நன்கு அடித்தேயிந் நானிலத்தைத் தூய்மைசெய்
அண்ணாவும் வண்ணானும் நேர்.

—தமிழ்ச்செல்வன், திருவையாறு.

★

சாவாக் கருத்தும் சலிக்கா உவமையும்
மூவியலின் ஆய்வும் மிகமொழிந்தே-நாவினிக்கும்
பண்ணார் தமிழில் பொதுஉடைமை நல்கிவரும்
அண்ணாவை நற்குறளை நாடு.

—ஆ. கோவிந்தராசன், குடந்தை.

★

கூடி வதியுங் குணமும் இனத்துள்ளே
நாடி யெனவிளங்கும் நற்பண்பும்-கேடின்றி
எண்ணம் எடுத்தியம்பி ஏற்றம் தருவதனால்
அண்ணாவை ஏறென் றறி!

—செ. பாலு, வேலூர்.

★

காண அமைந்தஇரு கண்மணிக்கு எவ்வாறும்
ஊனம் விளையா திமைகாக்கும்-மாநலஞ்சேர்
தென்னாட்டு மக்களுக்குத் தீங்கெதுவும் நேராமல்
அண்ணாவே காக்கும் இமை.

—குகன்குருசாமி, கமுதி.

★ பரிசு பெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

பரிசு பெற்றவர் முழு முகவரியும் தருக.

போங்கல் விழாவிற்கு ஏராளமான வாழ்த்துக்கள் அனுப்பிய தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—கண்ணதாசன்.

பொங்கல் விழாவின்போது எங்களுக்கு வாழ்த்தனுப்பிய கழகத்தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தென்னரசு,
நாகராஜன்,
தமிழ்ப்பித்தன்.

வால்மீகியின் 'ஜானகி'க்கு இராவணனே காதலன்?

வாதாடினாள் இராவணனுக்காக! இதற்கென்ன பொருள்?

அவன் முடிவுக்குக் காரணமாக இருந்த நாம் மூவரும் (இராமன், அனுமன், சீதை) குற்றவாளிகளே என்று சீதை அனுமனிடம் எதிர்வாதம் செய்வாளேயானால் இராவணன் அழிவை அவள் விரும்பவில்லை என்றுதானே பொருள்! தன் கணவன் வெற்றிக்கு மகிழ வேண்டிய அவள், என் இராவணன் இறப்புக்காக குறிப்பாக வருந்த வேண்டும்? அதிலேதான் ஜானகியின் அந்தரங்கமான உள்ளக்கிடக்கை அடங்கியிருக்கிறது. மேலும் இராமன், அனுமன், சீதை ஆகியோர்கள் எவ்வாறு குற்றவாளிகள் என்பதற்குரிய காரணங்களையும் சீதை அனுமனுக்கு விளக்கிக் கூறுகிறாள்.

“அனுமனே, நான் கூறுவதைக் கவனமாகக் கேட்பாயாக. நீங்கள் இராவணனைச் சேர்ந்தோரிடம் பகைமை கொள்ளக் காரணமே இல்லை. அது நியாயமும் இல்லை. இத்துன்பங்கள் யாவற்றிற்கும் என் முன்கருமங்களேயாம். இவனும், இவனைச் சேர்ந்தோர்களும் நற்குணமிக்கவர்கள். எப்படிப்பட்ட அபராதங்களை இவர்கள் செய்யினும் நாம் அதைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதற்கு சான்றாக ஒரு கதை கூறுகிறேன் கேள்” என்று இவ்வாறு அனுமன் முன் சீதை பேசத் தொடங்கி அவள் கூற விரும்புகிற கதையினையும் அனுமனிடம் கூறுகிறாள். (அக்கதையை இவண் எழுதின் விரியுமாதலால் அதனை இவண் எழுத முடியவில்லை. அக்கதை வால்மீகி இராமாயணம் யுத்தகாண்டம் இறுதி சருக்கத்தில் இருக்கிறது. விரும்பின் பார்க்கலாம். அக்கதை ஒரு வேடன், ஒரு கரடி, ஒரு புலி ஆகியவைகளைப் பற்றியது, அனுமன் எவ்வாறு குற்றவாளியாவான் என்பதை சீதை முதற்கண் நிரூபிக்க விரும்புகிறாள். அவள் அனுமனை நோக்கி “நீ சுக்ரீவனுடைய சேவகனாகையால் நான் இருக்கும் இடத்தைத் தேடிச் செல்லவேண்டும் என்பதே அவன் உனக்கு இட்ட கட்டளையாகும். நீ அவன் சொன்னதை மட்டும் செய்திருக்க வேண்டுமேயல்லாமல் அதற்குமேல் போயிருக்கக்கூடாது. காரணம் நீ அவனுடைய சேவகன். இலங்கைக்குத் தீ வைக்கவும், அசோக வனத்தை அழிக்கவும் அவன் உனக்கு ஆணை இட்டிருந்தானா? அத்துமீறி இத்தகாத செயலைச் செய்த நீ ஒரு குற்றவாளியல்லவா? எனவே உன்னை முதலில் தண்டிக்க வேண்டும்.”

இரண்டாவதாக இராமன் எவ்வாறு குற்றவாளி யென்பதைக் கூறுகிறாள். சீதை “உலகில் கணவன் மனைவியைக் காப்பாற்றுவதும் ஆதரிப்பதும் அவனுடைய பிரதான கடமைகளாகும். விவேகமில்லாத மிருகங்கள்கூட தன் குட்டிகளைக் கண்போலக் காப்பாற்றுகின்றன. ஒருவன் எவ்வளவுதான் அற்பமாய் இருந்தாலும் தன் மனைவிக்குப் பிறன் செய்த அவமானத்தைப் பொறுப்பானா? இராமன் ஒரு சத்ரியன், வீரன்; இச்வாகு வம்சத்தினன். அத்தகையவன், இராவணன் என்னைத் தொட்டுத் தூக்கிச் சென்று பல மாதங்கள் தன்னிடமே வைத்துக்கொள்ள அவர் அவனை அனுமதித்தாரே. இதுவா தர்மம்? எனவே இராமனும் குற்றவாளியே, ஆகவே அவரும் தண்டனைக்கு உரியவர்தான்.

மூன்றாவதாக தன்னையும் ஒரு குற்றவாளியெனக் கூறி அதற்குரிய காரணத்தைக் கூறுகிறாள். “நானோர் சத்திரியப்பெண்; சத்ரியன் மனைவியும்கூட! மற்ற புருஷனை மனதிலும் நினைக்கக் கூடாது. அப்படியானால் இராவணன் என்னைத் தொட்டு எடுத்து, தன்னுடல்மேல் வைத்து தன்னிடம் கொண்டுசென்றதால் நானும் நியாயப்படி உயிர்விட வேண்டியவள்தான். எனவே நாம் மூவரும் இவ்வகையிலே குற்றவாளிகளாகி தண்டனைக்குரியவர்களாகிறோம்.” என்று சீதை அனுமனிடம் தன் கருத்துக்களைக் கூறிமுடித்தாள். இராவணனைச் சீதை உண்மையிலே வெறுத்து இராமன் செயலைப் பாராட்டி இராவணன் அழிவிற்கு மகிழ்பவளாயிருந்தால் இராவணன் குற்றவாளியல்ல என்று நிரூபிக்க ஜானகி முயல வேண்டிய அவசியமென்ன? எனவே சீதை இராவணனை அறவே வெறுத்தொதுக்காது அவனுக்கும் தன்னிதயத்தில் என்றும் அழியா ஓரிடத்தை ஒதுக்கியிருந்தாள் எனத் தெரிய வருகிறதன்றோ! (வால்மீகி இராமாயணம் யுத்தகாண்டம்.) இதற்குச் சார்பாக மற்றொரு சான்று. இலங்கையின்றும் சீதை மீட்கப்பட்டு அயோத்தி அரண்மனையில் அந்தப்புரத்திலேயுள்ள தன்னறையில் இருக்கிறாள். அவளை அடைந்த கைகேயி இராவணன் என்ற மகா புருஷன் எப்படியிருப்பான் என்று கேட்கவே. இராவணனுடைய உருவத்தை சீதை வரைந்து காட்ட விரும்பினாள். வரைந்து முடிக்கவும் அங்கே இராமன் எதிர்பாராமல் வரவும் சீதை திடுக்கிட்டவளாய் அதைத் தலையணையின் கீழே மறைக்க முயன்றாள். இதைக் கண்டு வெகுண்ட இராமன் அவளை நோக்கி “இன்னும் அவன் நினைப்பு உனக்கு விடவில்லையா சீதை! அவன் இறப்பினும் அவன் உருவத்தை எழுதியாவது திருப்தியடையலாமென எண்ணுகிறாயா? என்முன் நில்லாதே மறைந்துபோ? என்று கடிந்து பேசி இராமன் அவ்விடத்தைவிட்டு வெளியேறுகிறான். (இந்நிகழ்ச்சி பரம்பரா கதையினின்றும் எடுக்கப்பட்டது.)

இராவணனை சீதை உண்மையிலே விரும்பியிருக்கவில்லையேல் அவன் உருவத்தை ஏன் வரைந்து கைகேயிக்கு காட்டவேண்டும்? உண்மையாகவே சீதை இராவணனை வெறுத்திருந்தால் கைகேயி இராவணனைப் பற்றி தன்னிடம் கேட்டதும் “என் வாழ்வைக் கெடுத்த அத்தீயவனைப் பற்றி என்னிடம் ஒன்றுமே கேட்க வேண்டாம். அவனால் நான் பெற்ற அல்லலெல்லாம் போதும். இனியும் பெற விரும்பேன். அவனைப் பற்றி எனக்கொன்றுமே தெரியாது” என்று வெளிப்படையாக, தெளிவான முறையிலே கைகேயியிடம் சீதை கூறியிருக்க வேண்டும். அவ்வாறின்றி கைகேயி கேட்ட மாத்திரத்தில் இராவணனின் உருவத்தை சீதை வரைய விரும்பியிருப்பாளா யின் இராமன் கூறியதுபோல இராவணன் இறந்தபின் அவன் உருவத்தை எழுதியாவது தன்னை அமைதி செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணந்தானே சீதையின் மனதிலே இருக்கவேண்டுமேயன்றி வேறெந்த எண்ணமும் இருக்க நியாயமில்லை. இதற்கு ஏற்றாற்போல கைகேயியின் கூற்றும் அமைந்துள்ளது. அவள் கூறுகிறாள் “மனிதருக்குப் பிரியமான பொருள்களே அடிக்கடி நினைவுக்கு வரும். பெண்களின் மனதை உண்மையாகவே அறிந்தவர்கள் யார்? என்கிறாள். (இக்கருத்து ஆனந்த இராமாயணம் ஜன்மம் மூன்றிலே காணப்படும்) எனவே சீதையால் விரும்பப்பட்ட பொருள் இராவணன், எனவே அவன் உருவம் அவள் உள்ளத்தில் அடிக்கடி அசைக்கமுடியாத அளவிலே இடம் பெற்றிருக்க வேண்டும் என்றுதானே நாம் எண்ண வேண்டியுளது! இல்லையேல் இராவணன் உருவத்தை ஜானகி படமாக வரைய வேண்டிய அவசியம் இல்லையே!

இலங்கைப் போர் முடிந்ததும் சீதையை உடனே அழைத்துவந்து தன் மனைவியாக மீண்டும் அவ புடன் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இராமன் மனம் எண்ணவே இல்லை. தன் மனைவியின் ஒழுக்கத்திலே இராமன் தீராத ஐயம் கொண்டான். இவ்வாறு கொண்ட ஐயம் இறுவரையில் அவன் உள்ளத்தை விட்டு அகலவேயில்லை. இந்தக் காரணத்தைக் கொண்டுதான் இலவன், குசன் ஆகியோரைத் தன் மக்கள் என்று இராமன் ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான். சீதையை இராமன்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். அவனது வெம்பிய வேதனையுள்ளம் சீதையை நோக்கிப் பலவாறு ஏசுகிறது. இராமன் கூறுகிறான்.

“நான் மானமுள்ள சத்ரியனாகையால் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் செய்தேன். இராவணன் செய்த தவறுக்காக அவனைக் கொன்றேன். மானங் காக்கவே உன்னை நான் விடுதலை செய்தேனேயல்லாமல் உன்னிடம் மீண்டும் இன்பம் காணவேண்டும் என்ற கீழான நோக்கிற்காகவல்ல. கண்வலியால் வாதை படுகிறவனுக்கு சூரியன் ஒளி எவ்வாறு வேதனை தருமோ அதுபோல என்முன் நீ நிற்பது எனக்கு மிக வே?னையைத் தருகிறது.

உத்தம குலத்திலே பிறந்த எவனாவது பல மாதங்கள் அன்னியன் மனையிலிருந்த ஸ்திரீயை மீண்டும் மனைவியாக ஏற்றுக் கொள்ள விரும்புவானா? நீ உன் கற்பை இழக்காமல் இருக்க வகையேயில்லை. போர்க்களத்தில் இராவணனது தேஜஸைக் கண்டு நானே வியப்புற்றேன். நீ விரும்பிய இடத்திற்குச் செல்லலாம். இனி உன்னை யாரும் தடுப்பாரில்லை. இவ்வாறு நான் கூறுவதெல்லாம் திடீரென ஆத்திரப்பட்டுக் கூறி வருவதாக எண்ணவேண்டாம். இதை நான் தீர ஆலோசித்து தெளிந்தபின்னாதான் கூறுகிறேன் நீ வேண்டுமானால் சுக்கிரீவன், இலக்குவன் போன்றவர்கள் பாதுகாப்பில் இருக்கலாம்” என்று இராமன் கூறுகிறான்.

இதற்கு சீதையால் அளிக்கப்பட்ட விடையையும் நாம் காண வேண்டும். அவள் கூறுகிறாள், “நீ என்மேல் இத்தகைய குற்றங்களையெல்லாம் கூறினாய். அவனோ பலவான்; அவனிடமிருந்து நானெவ்வாறு என்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்? நீயாவது கர்ப்பத்திலிருந்து தோன்றினாய். நானோ கர்ப்ப வாசனையே அறியாதவள். எனவே நான் தீக் குளிக்கும் போது கூறவேண்டியது யாதுளது? மனத்தாலும் வாக்காலும் நான் தூயவள் என்பதைத் தவிர வேறொன்றும் யான் கூறுவதற்கில்லை” என்று கூறினாள். சீதையின் கூற்றுப்படி அவள் தன் கற்பை இராவணனிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை என்பது தெளிவாகிறது.

சீதை அக்கினிப் பிரவேசம் செய்தாலும்கூட அவளுடைய கற்பொழுக்கத்திலே இராமன் கொண்டிருந்த ஐயம் இறுதி வரையில் அவன் அகத்தை விட்டு அகலவில்லை. இதனால் மனமுடைந்த இராமன் இலவன், குசன் என்ற தன் புதல்வர்களையும் தன்னுடைய மக்கள் அல்ல என்று மறுத்துச் சொல்லக்கூடிய அளவிற்குத் துணிந்துவிட்டான்.

தனது ஆட்சி முறையைப் பற்றித் தன் குடிமக்கள் எவ்வாறு பேசிக்கொள்கிறார்கள் என்று பத்ரன் என்ற பிராமணனிடம் இராமன் கேட்கிறான். அதற்கு அவன் “பிரபு தங்களுடைய இலங்கை வெற்றியின் பெருமையைப் பற்றி மக்கள் நாற்சந்திகளிலும், கடைவீதிகளிலும் மிகவாகப் புகழ்ந்து பேசிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் பேசிக்கொண்ட மற்றொரு செய்தியானது உங்களிடம் நான் அதைச் சொல்ல முடியாத அளவிற்கு என் மனதிற்கு வேதனை அளித்தது. அயலானால் எடுத்துச் செல்லப்பட்டு அவன் பாதுகாவலிலே பல மாதங்கள் வரை இருந்த சீதையைக் கூட்டி வந்து அவளுடன் இராமன் சிறிதும் மான உணர்ச்சியில்லாமல் இன்பமாக வாழ்கிறான். இந்த வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையாகுமா? நம்முடைய மனைவியரும் இதைப் போல் செய்துவிட்டால் நாமும் இவனைப்போல் அவளைக் கூட்டிவந்து மானமிழந்து அவளுடன் வாழ வேண்டும். போலும்! காரணம் மன்னன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற பழமொழி ஒன்று உளதல்லவா? என்று இவ்வாறு தாங்கள் சீதையை எடுத்து வந்ததைப் பற்றியும், அவளின் ஒழுக்கத்தைப் பற்றியும் கேவலமாகப் பேசிக்கொள்கிறார்கள் நம் குடிமக்கள்” என்று கூறினான். முன்னரே சீதையின் கற்பொழுக்கத்தைப் பற்றி அரைகுறையாக ஐயம் கொண்டிருந்த இராமன் இப்பொழுது முழுதும் சீதையை வெறுத்தான். அவள் கற்பிலே முழுதும் அவநம்பிக்கை கொண்டான். சீதை கற்பிழந்தவளா இல்லையா என்ற தடுமாற்றத்திற்கு,

— 9-ம் பக்கம் —

எங்கள் சொந்தக் கைத்தறியில் தயாராகும் நூல் ஜமக்காளங்களும், கண்கவர் பட்டுப் பூ வேலை செய்த பார்டர் ஜமக்காளங்களும், கைத்தறி ஜவுளிகளும் ஏராளமாய் தயார் செய்து வருகிறோம். தாங்களும் ஒருமுறை ஆர்டர் செய்தால் உண்மை தெரியவரும். ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
குறைந்த லாபமும், அதிக வியாபாரமுமே எங்கள் குறிகோள்.

★

இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் ஏஜண்டுகள் தேவை: தக்க கமிஷன் தரப்படும். விபரங்களுக்கு விரைவில் எழுதவும். வியாபாரிகட்குத் தகுந்த ஊதியமுண்டு.

தி தனலக்ஷமி இண்டஸ்ட்ரியல்ஸ்,
புரோப்ரைட்டர்: எஸ். பி. சென்னியப்ப முதலியார்.
தபால் பெட்டி நெ. 7:
பவானி. : : (Via ஈரோடு S. Ry.)

ஏஜண்டுகள் தேவை!

★

எமது உயர்ந்தரக நூல், பட்டு ஜமக்காளங்களுக்கும், கெட்டிரக ஜமக்காளப் பைகளுக்கும், தமிழகமெங்கும் கழிவு அடிப்படையில் ஆர்டர்கள் வாங்க திறமைமிக்க ஏஜண்டுகள் தேவை.

★

விபரங்களுக்கு எழுதவும்:
B. T. S. டெக்ஸ்டைல்ஸ்,
பவானி P. O. (வழி ஈரோடு.)

கடமை புரிவோம்!...

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

குருட்டுக்கொள்கைகளும் வரட் டுத் தத்துவங்களும் நிலைபெற்று விட்டன. அவற்றை நம்பி அதலபாதாளத்தில் அள்ளி எறியப்பட்ட தமிழன் வாழ்வில் இன்றுவரை எழுச்சியின் ரேகைகள் தோன்றவில்லை மருட்சியினலுண்டான மயக்கம் தெளியவில்லை. அவன் எண் ணத்தில் புத்தொளியைக் காண வில்லை. எத்தனை எத் தனையோ நூற்றாண்டுகள் இப் படியே சென்று போயின இன் னும் அவன் வாழ்வு அகல் விளக்குக்கூட இல்லாத இருள் சூழ்ந்த குகையாக இருக்கிறது இதுதான் தமிழன் இமயத்தின் கொடுமுடியிலே இருந்து இந்த சமுத்திரத்தில் வீழ்ந்த கதை.

'தை' பிறந்தால் வழி பிறக் கும் என்பார்கள். எத்தனையோ 'பிறந்தன', 'பிறந்தன', 'பிறந் தன'. ஆனால் பிற்போக்குத் தன்மைக்கு அடிமைப்பட்ட தமிழன் மறந்த தன்வாழ்வை எண்ணிப் பார்த்தானில்லை சிதைந்த வாழ்வைச் செப்பனி டத் துடித்தானில்லை. தருக்க தம் கதியைத் தவிடுபொடி யாக்க முயன்றானில்லை.

இருண்ட ஆபிரிக்காக் கண் டத்து சுதேசிகள் விடுதலை கீதமாவது தமிழன் நெஞ்சில் புத்துணர்ச்சியைப் புகுத்தாத என்ற கவலை பலருக்குண்டு.

புதிய இந்த ஆண்டில்,

பொங்கு தமிழர்க்கின்னல்
விளைத்தால் சங்கார
நிசமென்று சங்கே முழங்கு

என்னும் புரட்சிக் கவிஞரின் ஆர்ப்பாட்டப் போர்ப் பா டோடு இழந்த வாழ்வுபெ தமிழுலகமே விழிப்புறு. வி வாழ்வு பெறு என்று கடமை புரிவோம். உரிமை பெறுவோ

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.